நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for Young friends of fmpb

# கெரீத்

இளைஞர் மாத இதழ்

FRIENDS MISSIONARY PRAYER BAND

களத்தில் 2026 வீரியம்

# மன்றாட்டு களத்தில் ஜெயம் காண்போம்!



Vol 41-Issue 8 - August - 2026

Private circulation only

# புதிய உடன்படிக்கையின் துதிக்களம்

REV. SELVINRAJ G CHARLES



எபிரெயர் நிருபம் பழைய ஏற்பாட்டின் சடங்கு முறைகளுக்கும், புதிய ஏற்பாட்டின் கிருபைக்கும் இடையே உள்ள ஆழமான வேறுபாட்டை நமக்கு விளக்குகிறது. குறிப்பாக, எபிரெயர் 8ஆம் அதிகாரம் மாபெரும் பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவை மையமாகக் கொண்டு ஒரு உன்னதமான ஆராதனையை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது.

**உன்னத துதிக்களத்தின் நாயகன் - இயேசுகிறிஸ்து:**

எபிரெயர் 8:1, 2 வசனங்களில், நமக்கு ஒரு மகா பெரிய பிரதான ஆசாரியர் இருக்கிறார் என்றும், அவர் பரலோகத்தில் உன்னதமானவருடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என்றும் விவரிக்கிறது.

**துதிக்கான காரணம்:**

- மனிதர்களால் அமைக்கப்பட்ட தற்காலிகமான கூடாரத்தில் அல்லாமல், கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட உண்மையான பரலோகக் கூடாரத்தில் இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார்.
- பூலோக ஆசாரியர்கள் மாறிக்கொண்டே இருந்தார்கள். ஆனால் இயேசு என்றென்றைக்கும் வாழ்கிறவராய், நமக்காக கிரியைச் செய்கிறார். இந்த உன்னதப் பதவிக்காக நாம் அவரைத் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**நிழலிலிருந்து நிஜத்திற்கு - மேலான உடன்படிக்கை:**

பழைய ஏற்பாட்டு ஆசாரிய ஊழியம் என்பது பரலோகத்தில் உள்ளவைகளின் "சாயலுக்கும் நிழலுக்கும்" ஒப்பாக இருந்தது (வசனம் 5). ஆனால் இயேசுகிறிஸ்துவோ அதைவிட விசேஷித்த ஊழியத்தைப் பெற்றிருக்கிறார்.

மோசேயின் நியாயப்பிரமாணம் தற்காலிகமானது. ஆனால் இயேசுவின் இரத்தம் நமக்கு ஒரு மேலான, நிலையான புதிய உடன்படிக்கையைத் தந்துள்ளது. நிழலான காரியங்கள் நீங்கி, நிஜமான ஆசீர்வாதங்களை நாம் பெற்றுக் கொண்ட களம் இந்த புதிய உடன்படிக்கையாகும்.

**இருதயத்தில் எழுதப்பட்ட பிரமாணம்:**

பழைய உடன்படிக்கையின் கற்பனைகள் கற்களிலே எழுதப்பட்டன. ஆனால் புதிய உடன்படிக்கையின் மகத்துவமே, தேவன் தம்முடைய பிரமாணங்களை நம்முடைய இருதயங்களில் எழுதுகிறார் என்பதுதான் (வசனம் 10).

- **உள் மன மாற்றம்:** "நாம் பயத்தினால் அல்ல, அன்பினால் தேவனைப் பின்பற்ற இந்த உடன்படிக்கை உதவுகிறது."
- **உறவு நிலை:** "நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" என்ற உறவின் உன்னத நிலையைத் தேவன் நமக்குத் தந்திருக்கிறார்.

வெளிப்புற சடங்குகளைத் தாண்டி, நம் இருதயத்தையே தேவன் தமது துதிக்களமாக மாற்றியுள்ளார்.

**கிருபையும், பாவமன்னிப்பும்:**

பழைய ஏற்பாட்டு பலிகள் பாவங்களைத் தற்காலிகமாக மூடினதே தவிர, முழுமையாக நீக்கவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையின் உச்சகட்ட ஆசீர்வாதமாக எபிரெயர் 8:12 கூறுகிறது:

**"ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."**

நம்முடைய கடந்த கால தவறுகளை முற்றிலும் மறந்து, நமக்கு மன்னிப்பை அருளின அந்த மகா கிருபைக்காக நம் நாவு எப்போதும் துதித்துக்கொண்டேயிருக்க வேண்டும். இந்த மேலான உடன்படிக்கையின் பாக்கியங்களை நினைத்து, நம் இருதயங்களை என்றும் கர்த்தரைத் துதிக்கும் ஜீவனுள்ள துதிக்களமாக மாற்றுவோமாக! அல்லேலூயா, ஆமென்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம்
வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


## தனிப்பிரதி ரூ. 25/-
## ஆண்டு சந்தா ரூ. 250/-

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - Pencil, Eraser, Sharpener - 5
மேரி ஜோன்சும் அவளது வேதாகமமும் - 6 & 7
கொலம்பியா - 10
பராமரிப்பாளர் மன சோர்வு - 12
Delulu - Duo - 14
உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? - ஹரியான்வி மொழி - 15
ஒரு காலணியில் பாடம் - 20
கனம் பொருந்திய பொர்க்கியு பெஸ்து! - 22


# மன்றாட்டு களத்தில் ஜெயம் காண்போம்!

திறப்பிலே நின்று சுவரை அடைக்க அழைக்கின்ற இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாலிபர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்!

மன்றாட்டு ஜெபம் என்பது மற்றவர்களுக்காக தேவசமூகத்தில் நாம் பரிந்துபேசுவது. நாம் சுயத்திற்கு மரித்து, மற்றவர்களின் சுகவாழ்விற்காக செயல்படுவதாகும். நாம் வாழும் இந்நாட்களில் மன்றாடி ஜெபிக்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். மற்றவர்களுக்காக விலைக்கிரயம் செலுத்தவும், ஜெபத்திலே மன்றாடவும், ஜெபிக்கவும் கூடிய மக்களை ஆண்டவர் தேடிக்கொண்டிருக்கின்றார்.

**நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன். (எசே.22:30)**

ஜெபிக்கிற மனிதன் மட்டுமே தேவனைப் பிரியப்படுத்துகிறான். ஆரம்ப நாட்களில், சுவிசேஷத்திற்கு கொஞ்சமும் மதிப்பு கொடுக்காத பஞ்சாபிலுள்ள சியல்கோட் மாவட்ட மக்கள், ஜெபிக்கும் ஜான் ஹைடு என்ற தேவ ஊழியரின் மன்றாட்டு ஜெபத்தின் மூலமாக சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள். இன்று பஞ்சாபில் திரள் கூட்ட மக்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்டு வருகிறார்கள்.

மன்றாட்டு ஜெபவீரன் அல்லது மன்றாட்டு ஜெபக்குழுவினர் மக்களின் பாவத்தைத் தன் மீது அல்லது தங்கள் மீது போட்டுக்கொண்டு பாவிகளோடு தங்களை ஒன்று சேர்த்துக்கொள்வார்கள். உதாரணமாக மோசே, நெகேமியா, எஸ்றா, தானியேல் இவர்களைப் போன்று பரிந்துப் பேசும் ஜெபவீரர்கள் திரளாக இக்காலத்தில் தேவைப்படுகின்றனர்.

இப்படிப்பட்ட மன்றாட்டு ஜெபவீரர்களாக நாம் இந்த பொறுப்பை ஏற்கவும், முன்வரவும் ஆண்டவர் நம்மை அழைக்கிறார். இத்தேசத்திற்காக மற்றும் இத்தேசமக்களின் சுகவாழ்விற்காக மன்றாட உங்களை அர்ப்பணிக்க மாட்டீர்களா?

ஜூலை மாதம் நடைபெற்ற வாலிபத் தலைவர்கள் முகாம் மற்றும் கூடுகைகள் மிகவும் ஆசீர்வாதமாக நடைபெற்றதற்காய் தேவனைத் துதித்து, ஜெபித்த உங்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இம்மாதம் 7-9 வரை நடைபெறவுள்ள மாநில உபவாச ஜெப முகாமிற்காகவும், 15ஆம் தேதி (சுதந்திர தின விடுமுறை) தீப் மீனாட்சிபுரம் (தென்காசி மாவட்டம்) மற்றும் 30ஆம் தேதி தண்டையார்பேட்டை போன்ற இடங்களில் நடைபெறவுள்ள வாலிபர் கூடுகைக்காகவும் தொடர்ந்து ஜெபித்துக்கொள்ளுங்கள். தேவன் தேடுகின்ற மனிதன் நான்தானென்று நம்மை அர்ப்பணித்து வாழ்வோம். அப்போது தேசம் மறுமலர்ச்சி அடையும். தொடர்ந்து உங்கள் ஜெபங்களில் எங்களை நினைவுக்கூர்ந்திடுங்கள். தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*

# கடவுளின் போர்ப்படை காத்





போர்ப்படை என்பது ஒரு குறிக்கோளுக்காக அல்லது கொள்கைக்காக தீவிரமாக செயல்பட தயாராக இருக்கும் ஒரு குழுவினரைக் குறிக்கும் வார்த்தையாகும்.

யாக்கோபின் 7வது மகனும், லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளின் மூத்த மகனுமாகிய காத்தைக் குறித்து இக்கட்டுரையில் தியானிக்க இருக்கிறோம். லேயாள் தன் சகோதரி ராகேலுடன் ஏற்பட்ட ஒரு சிக்கலான குடும்பச் சூழலில் காத் பிறந்தான். பெரும்பாலும் பிள்ளைகளின் பிறப்பு, கடவுளின் தயவு மற்றும் ஆசீர்வாதத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. லேயாள் அவனுக்கு "ஏராளமாகிறதென்று" சொல்லி காத் என்று பேரிட்டாள் (ஆதி. 30:11). காத் என்பதற்கு நல்வாய்ப்பு அல்லது அதிர்ஷ்டம் (Good Future of Luck) மற்றும் படை (Troop) என்ற இரண்டு வித அர்த்தங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இது லேயாளின் நன்றியுணர்வு மற்றும் வெற்றியுணர்வு ஆகிய இரண்டு குணங்களைப் பிரதிபலிக்கும் விதமாக உள்ளது.

## காத்தின் மனநிலையும், சுபாவமும்:

பொதுவாக காத்தின் மனநிலை கடவுளின் திட்டத்தின் மீது நம்பிக்கை வைக்கும் எண்ணத்தை வலுப்படுத்துகிறது. 40 வருட வனாந்திர பயணத்தின் இறுதிக்கட்டத்தில், இஸ்ரவேலர்கள் யோர்தானுக்கு கிழக்கே, மோவாபின் சமவெளிகளில் முகாமிட்டிருந்த வேளையில், கீலேயாத் மற்றும் யாசேர் ஆகிய இடங்கள், கால்நடைகளை மிகுதியாகக் கொண்டிருந்த ரூபன் மற்றும் காத் கோத்திரத்தாருக்கு ஏற்றதாகக் காணப்பட்டது. அவர்கள் மோசேயிடம் சென்று "எங்களை யோர்தான் நதிக்கு அப்புறம் (மேற்கே) கடந்து போகப்பண்ணீராக" (எண். 32:5) என்று கேட்டுக்கொண்டார்கள். சுயநலமாய் யோசித்த அவர்களின் காரியங்கள் மோசேயைக் கோபப்படுத்தியது. யோர்தானைக் கடந்து வாக்களிக்கப்பட்ட கானானைச் சுதந்தரிப்பது கடவுளின் திட்டம் என்பதையும், கூட்டு முயற்சிக்கு ஒவ்வொருவரின் பங்களிப்பும் அவசியம் என்பதையும் மோசே வலியுறுத்திய போது, கடவுளின் திட்டத்திற்கு தங்களை அர்ப்பணித்தார்கள். சொன்னபடியே, அணியணியாய் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக கடந்துப் போனார்கள் (யோசுவா 4:12). எல்லா கோத்திரத்தாரும் தங்கள் சுதந்திரத்தை அடைந்து, பின் கீலேயாத்துக்கு திரும்பும் முன்பு யோசுவாவினால் புகழப்பட்டார்கள் (யோசுவா 22:1-6). யோர்தானைக் கடக்கும் முன்பு அடையாளமாக அதன் ஓரத்திலே பார்வைக்கு பெரிதான ஒரு பீடத்தைக் கட்டி, கர்த்தரிடத்திலே தங்களுக்குள்ள பங்கை, அர்ப்பணிப்பை உறுதிப்படுத்திக் கொண்டார்கள் (யோசுவா 22:10, 25, 26). காத் கோத்திரத்தாருக்கு வடக்கே மனாசே கோத்திரத்தாரும், தெற்கே ரூபன் கோத்திரத்தாரும் சுதந்திரங்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

## தகப்பனின் ஆசீர்வாதம்:

"காத் என்பவன்மேல் ராணுவக்கூட்டம் பாய்ந்துவிழும்; அவனோ முடிவிலே அதின்மேல் பாய்ந்துவிழுவான்" (ஆதி. 49:19) என்ற ஆசீர்வாதத்தைக் காத் தகப்பனாகிய யாக்கோபிடமிருந்து பெற்றுக்கொள்கிறான். யோர்தான் நதிக்கு அப்புறத்திலே குடியேறிய காத் கோத்திரத்தார், மோவாபியர் மற்றும் அம்மோனியர்களின் எல்லைத் தாக்குதல்களுக்கு இலக்காகினார்கள். இருப்பினும் எதிர்த்துப் போராடுவதற்கான வலிமையினாலும், விடாமுயற்சியினாலும் அவர்கள் தங்கள் வலிமையை நிரூபித்துக் காட்டினார்கள். காத்தியரில் கேடகமும், பட்டயமும் எடுத்து, வில்லெய்து, யுத்தத்திற்குப் பழகி, படைக்குப் போகத்தக்க சேவகர்கள் அநேகர் இருந்தார்கள் (1 நாளா. 5:18). அவர்கள் பரிசையும், ஈட்டியும் பிடித்து, சிங்கமுகம் போன்ற முகமும், மலைகளிலிருக்கிற வெளிமான் வேகம் போன்ற வேகமும் உடையவர்கள். தங்கள் அர்ப்பணிப்பில் உண்மையுள்ளவர்களாயிருந்த அவர்கள் யோர்தான் கரைபுரண்டுப் போயிருக்கிற முதலாம் மாதத்திலே அதைக்கடந்து தாவீதுக்கு விரோதியாயிருந்த யாவரையும் துரத்திவிட்டு, தாவீதின் சேனையை மகா சேனையாக்கினார்கள் (1 நாளா. 12:8, 15, 22). இவ்வாறு தேவனுடைய நீதியை நிலைநாட்டும் தாவீதின் ராஜ்யபார திட்டத்தில் தங்களின் உறுதியையும், உண்மையையும் நிரூபித்தார்கள்.

## தலைவனின் தரிசனம்:

உபா. 33:20, 21இல் காத்தைக் குறித்து, காத்துக்கு விஸ்தாரமான இடத்தைக் கொடுத்தவர் ஸ்தோத்தரிக்கப்பட்டவர். அவன் சிங்கத்தைப் போல் தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான். அவன் தனக்கான முதல் இடத்தைப் பார்த்துக்கொண்டான். அங்கே தனக்கு நியாயப்பிரமாணிகன் கொடுத்த பங்கு பத்திரமாயிருக்கிறது. ஆனாலும் அவன் ஜனத்தின் முன்னணியாய் வந்து, மற்ற இஸ்ரவேலுடனே கர்த்தரின் நீதியையும், அவருடைய நியாயங்களையும் நடப்பிப்பான் என்றான். தனக்கான இடத்தைத் தேர்ந்தெடுத்த காத்தியர்களின் சுதந்திரம் மூன்று சிறப்பான அம்சங்களை உள்ளடக்கியுள்ளது.

1. **விஸ்தாரமான இடம்**: கீலேயாத்தின் முழுப்பகுதியையும் உள்ளடக்கியது. எல்லைக்கு அப்பாலும் விரிவுபடுத்தப்பட்டது.
2. **பாதுகாப்பு மற்றும் வலிமையின் இடம்**: அனைத்து இஸ்ரவேல் கோத்திரத்தாரையும் பாதுகாக்கும் பொறுப்பை உணர்த்தும் பாதுகாக்கப்பட்ட வலிமையின் அடையாளம். அவர்கள் சிங்கத்தைப் போல் தங்கியிருந்து தங்கள் எல்லைகளைப் பாதுகாத்தார்கள்.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# Pencil, Eraser,

 

# Sharpener

My dear teen Boys and Girls, happy August month greetings to you and your family. இந்த month 15th நம்மளோட 79th Anniversary and celebration of 80th Independence Day, so we are wishing you and your family a very happy Independence day 2026. ஒரு சின்ன suggestion, daily subjectsஅ அன்னனைக்கே finish பண்ணுறதுக்கு try பண்ணுங்க. Atleast அந்த weekend ஆவது finish பண்ணிருங்க. நாளைக்கு படிக்கலாம், அப்புறம் படிக்கலாம்னு timeஅ waste பண்ணினா, ஒருநாளும் எதையும் படிக்கவே முடியாது. இப்படி disciplineஆ படிக்காட்டி, எந்தவொரு conceptயையும் deepஆ understand பண்ணிக்க முடியாது. நாளடைவில் procrastination நம்ம Habbitஆ மாறிடும். இத try பண்ணி பாருங்க. Result உங்களுக்கே தெரியும். இந்த Teen page plan நீங்க அடிக்கடி use பண்ணுற Geometry Boxல இருக்கிற things தான். Last 7 monthsஆ Compass, Divider, Protractor, Set Square 45° & 60°, Ruler and french curversன்னு எல்லாத்தையும் பார்த்தோம். அந்தபடி இந்த month நாம பாக்கப் போற things Pencil, Eraser and Sharpener. இந்த மூன்று thingsக்கும் end என்பதே கிடையாது. Studentsல இருந்து பெரியவங்க வரைக்கும் ஏதாவது workக்கு இவைகளை use பண்ணிட்டேதான் இருப்பாங்க. இப்படி இந்த objects, simpleஆயும் efficientஆயும் இருப்பதற்கு பின்னால் இருக்கிறவங்களைப் பத்தி பார்ப்போமா?

Graphiteஅ வச்சி எழுதுறதுக்கும், வரையறதுக்கும் மக்கள் தாராளமா use பண்ணிட்டு இருந்தாங்க. அந்தக் காலகட்டத்துல, Nicolas Jacques Conte Graphiteஐ வச்சி எழுதுறது பிடிக்கலை. ஏன்னா, அதை கைல எடுத்துட்டு, அடுத்த எடத்த தொடும்போது Graphite எல்லா இடத்திலேயும் பட்டுறுது. Nicolas ஒரு French Scientist, இந்த Problemஅ Solve பண்ணனும்னு நினைச்சாரு. அப்படி உருவான Solution தான் Modern day - Pencil Design. Conte Graphiteடையும், Clayயையும் mix பண்ணி, அத modern baseகுள்ள வைச்சாரு. இன்னைக்கு வரைக்கும் அதுதான் Pencilலோட Design. Marketஇல் நிறைய type pencil இருந்தாலும், ரொம்ப Commonஆன pencil design Conteயோட Design தான். Ok, இப்ப Pencil Ready - ஆனா அது எழுதனும்னா வெளியில இருக்கிற woodஅ sharp பண்ணனுமே? அதுக்கு Knife தான் use பண்ணினாங்க. Knifeயை use பண்ணுறது அவ்வளவு Safe கிடையாது. அதனால இந்த problemக்கு solution கொடுத்தவருதான் Thierry Des Estivaux. Thierry ஒரு French Mathematicion, இன்னைக்கு இருக்குற Modern Sharpener Design இவரோடதுதான். Small, Hand-Held, Cone- Shaped Opening எல்லாம் Thierryயோட Design தான். Graphiteஆல எழுதினதையும், வரைஞ்சதையும் Soft Bread Crumbsச வச்சிதான் Erase பண்ணினாங்க. அப்போ Pencil markஅ Natural rubber அழிச்சிரும்னு Joseph Phiestly தான் கண்டுபிடிச்சாரு. அதுக்கப்புறம் Edward Nairne Eraserஅ அதிக அளவுல செஞ்சி Sale பண்ணினாரு.

சரி இப்ப Bible application time, Pencil பார்க்க ரொம்ப simpleலா தான் இருக்கும். ஆனா அது ஒரு Artist கையில் சென்றால் ஒரு அழகான படத்தை உருவாக்கும். இது ஒரு Student கையில Maths Solve பண்ணுறதுக்கும், தன்னுடைய ideasஅ express பண்ணுறதுக்கும் use ஆகுது. கடவுள் ஒவ்வொரு personக்கும் different talents and abilitiesஅ கொடுத்திருக்கிறாரு. பாடுறது, வரையறது, Instruments வாசிக்கிறது, பேசுறது, விளையாடுவதுன்னு இன்னும் சொல்லிகிட்டே போகலாம். இத compare பண்ணி பெருசு, சின்னதுனு சொல்லுறதுக்கு ஒன்னுமே இல்லை. ஆனா இந்த Talents and Abilitiesஅ God's purposeக்கு use பண்ணுறியா என்பதுதான் முக்கியம். Pencil அதுவா எழுதாது. ஒருத்தர் அதை எடுத்து எழுதினாதான் எழுதும். உன்னுடைய Talents and Abilities waste ஆயிற கூடாது. அத கர்த்தருடைய பணியான இந்த நாட்டை அவருக்குன்னு கட்டுற பணிக்காக பயன்படுத்து. இதபத்தி Peter சொல்லுறத கவனி; "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்." 1பேதுரு 4:10

Everyone makes mistakes, கடவுளை விட்டு தூரமா போறது, தெரிஞ்சே மற்றவங்களை Hurt பண்ணுறது இப்படிப்பட்ட பாவத்துல இருக்கும்போது, இந்த Eraser ஒரு விசயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்துது. உங்க story இதோட முடியலைன்னு.

Pencil marksயை Eraser அழிக்கிற மாதிரி Sinனோட Marksயை அழிக்கிறதுக்கு கர்த்தரால் தான் முடியும். இத நீங்க புரிஞ்சிக்கிறதோட நிறுத்தாம உங்க Friendsக்கு சொல்ல வேண்டியது உங்க கடமை. பாவ வாழ்வை ஒருநாளும் மறைக்காதீங்க. அத கர்த்தராகிய இயேசுகிறிஸ்துகிட்ட கொண்டுவாங்க. உங்க பாவ கறைய மாத்தி புதிய வாழ்வை தர அவர் வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

இத பத்தி யோவான் சொல்லுறத கவனி; "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்." (1 யோவான் 1:9)

கடைசியா Sharpener, அது Disciplineஅ நம்ம முன்னாடி வைக்குது. Pencil Sharpஆ இருந்தா தான் அதுல ஒழுங்கா எழுதவோ, வரையவோ முடியும். Pencilஅ sharp பண்ணும்போது, அது தன்னுடைய partsயை loose பண்ணும். Disciplineவும் tough தான், நம்ம life styleல Change and loose பண்ணவேண்டிய காரியங்களை demand பண்ணுது. Disciplined life style தான் Christian life style, இப்படி இருந்தாதான் நீங்க கிறிஸ்துவில் வளர முடியும்.

எபிரெயர் 12:11 சொல்லியிருப்பதைக் கவனி: "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்."

So teens, Christ Centred disciplined life style தான் நம்முடைய ultimate goal. பாவ வாழ்வைவிட்டு, கிறிஸ்துவினுடைய பணியைச் செய்கிறவர்களாக உங்களை ஒப்புக்கொடுங்க. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களோடு எப்பொழுதும் இருப்பாராக.

So, Untill then see you next month, Bye!



MRS. JOYLINE JEROME

# மேரி ஜோன்சும் அவளது வேதாகமமும்



MR. B. BENJAMIN

**இளமைக்காலம்:**

மேரி ஜோன்ஸ் 16 டிசம்பர் 1784இல் வேல்ஸ் நாட்டில் இந்திரிஸ் மலை அடிவாரத்திலுள்ள ஒரு சிற்றூரில் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து வளர்ந்தாள். அவளது பெற்றோர் நெசவு வேலை செய்து ஜீவனம் செய்தனர். அவர்கள், அங்குள்ள மெத்தடிஸ்ட் சிற்றாலயத்தில் ஆராதனைச் செய்து வந்தனர். மேரி ஜோன்ஸ் சிறுவயதாக இருக்கும்போதே ஆலயம் செல்வதில் தவறுவதே இல்லை. அந்த ஆலயம் செல்ல 2 மைல் நடக்கவேண்டும். ஆனாலும், தூரத்தை அவள் பொருட்படுத்துவதே இல்லை. அங்கு போதிக்கப்படும் தேவசெய்திகளை மிகவும் கருத்தாய் ஆழ்ந்து கவனிப்பாள். அந்த சிற்றாலயத்தில் கருப்பு நிற தோலால் பைன்டு செய்யப்பட்ட பெரிய பைபிள் ஒன்று இருக்கும். அதைத் திறந்து அதிலிருந்து தான் பாஸ்டர் செய்தியளிப்பார். ஆராதனை முடிந்தபின் மேரி ஜோன்ஸ் பீடத்தண்டைச் சென்று அந்த வேதாகமத்தைத் திறந்து பார்ப்பாள். ஆனால் அவளுக்குப் படிப்பறிவு இல்லாததால் அதை வாசிக்கத் தெரியவில்லை. அதைக் குறித்து மிகவும் துக்கப்பட்டாள். அவளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. எனினும் இந்த வேதாகமத்தில் எழுதியிருப்பதைத் தான் கற்றறிய மிகவும் ஆவலுடன் இருந்தாள்.

மேரி ஜோன்ஸ் 8 வயதாக இருக்கும்போது ஒரு ஞாயிற்றுக்கிழமை சிற்றாலயத்தின் அறிவிப்பு நேரத்தில் "இந்த கிராமத்தில் ஒரு தொடக்கப்பள்ளி ஆரம்பிக்கப்பட இருக்கிறது. தயவு செய்து, பிள்ளைகள் அதில் சேர்ந்து படிக்க வேண்டும்" என்ற அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மேரி ஜோன்ஸ், அறிவிப்பைக் கேட்டதும் மிகவும் பரவசமடைந்தாள். அவளுடைய மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. அவளுடைய நோக்கமெல்லாம் விரைவில் தானே வேதத்தை வாசிக்க வேண்டுமென்பதுதான். அப்பள்ளி மேரி ஜோன்ஸ் வீட்டின் அருகாமையிலுள்ள ஒரு விவசாயப்பண்ணை வீட்டில் ஆரம்பிக்கப்பட்டது. ஆசிரியர் Mr. இவான்ஸ்ம், அவருடைய மனைவியும் இணைந்து பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுத்தனர். மேரி ஜோன்ஸ் தனது அம்மாவுக்கு உதவியாக வீட்டு வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு சரியாக பள்ளி நேரத்தில் வந்துவிடுவாள். ஆர்வத்தோடு கல்வி கற்றாள். வீட்டிலும் வேலை செய்துவிட்டு பள்ளியிலும் வந்து பிரயாசப்படுவதைக் கண்ட அவளது பெற்றோர் மிகவும் ஆச்சரியப்பட்டனர். மேரி ஜோன்ஸ், அம்மா நான் வேதாகமத்திலுள்ள நிகழ்வுகளையெல்லாம் நானே படித்து அறிய வேண்டும், அதுதான் என் ஆசை. மேலும் "ஆண்டவர் ஒரு வேதாகமத்தை எனக்குத் தர வேண்டும்" என்றாள். "நிச்சயமாகவே ஆண்டவர் உன் விருப்பத்தை நிறைவேற்றித் தருவார்" என்றாள் தாய்.

**ஆண்டவர், எனக்கு ஒரு வேதாகமத்தைத் தருவார்:**

மேரி, உனக்குச் சொந்தமாகவே ஒரு வேதாகமம் வேண்டும் என்று நீ விரும்புகிறதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நமது மொழியில் வேதாகமம் கிடைப்பது மிகவும் அரிதானக் காரியமாகும். மேலும் நாம் அன்றாட வாழ்வை நடத்துவதே மிகவும் கடினமாயிருக்கிற இந்த நேரத்தில், வேதாகமத்தை விலைக்கொடுத்து வாங்குவது நமக்கு எட்டாததாக இருக்கிறது. மேலும் விற்பனைக்கென்று வேதாகமம் இருக்கிறதா என்பதும் தெரியவில்லை என்று தாயார் புலம்ப ஆரம்பித்தாள். "அம்மா, முன்பு எனக்கு படிக்கத்தெரியாது. இப்போது நான் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைத் தேவன் தந்தார். அந்த வாய்ப்பைத் தந்தவர், நான் கற்றுக்கொள்ள எனக்கு ஒரு வேதாகமத்தைத் தரமாட்டாரா? என்று தனது ஆழ்ந்த விசுவாசத்தில் உறுதியாகச் சொன்னாள். இதைக்கேட்ட அவளது தாய், அவளை அணைத்து உச்சந்தலையில் முத்தமிட்டு "மகளே நல்லது. உன் விசுவாசம் பெரிது. ஒவ்வொரு நாள் இரவும் நாம் இருவரும் விசுவாசத்தோடு ஜெபிப்போம். ஆண்டவர் வாய்க்கச் செய்வார்" என்றாள்.

**ஏழ்மையிலும் பணம் சேர்க்க ஆரம்பித்தல்:**

வீட்டில் ஒரு சிறிய பணப்பெட்டி இருந்தது. அதில் அவள் பணம் சேர்க்க ஆரம்பித்தாள். வீட்டில் வளர்க்கும் கோழி முட்டைகளை விற்று பணம் சேர்க்க ஆரம்பித்தாள். அப்போது அவளுக்கு வயது 14. ஒருநாள் பணப்பெட்டிக்குள் உற்சாகமாகப் பணத்தைப் போட்டுக்கொண்டிருந்தாள். மற்ற பிள்ளைகளெல்லாம் விளையாடுகிற நேரத்தில் மேரி ஜோன்ஸ் மாத்திரம் ஏதேனும் கிடைக்கும் வேலையைச் செய்து பணம் சம்பாதிப்பாள். "இன்னும் இரண்டு ஆண்டுகளில் ஒரு வேதாகமத்தை வாங்கத்தக்கதானத் தொகை சேர்ந்துவிடும் என்ற மகிழ்ச்சியோடு தாயாரிடம் கூறினாள்.

**பணம் சேர்ந்தது:**

பாஸ்டர், "நான் செய்து முடித்துவிட்டேன்" என்று மகிழ்ச்சியோடு போய்ப் பாஸ்டரிடம் சொன்னாள். அவர் "என்ன செய்து முடித்திருக்கிறாய்" என்று கேட்டார். பாஸ்டர் "வேல்ஸ் மொழியில் வேதாகமம் வாங்குவதற்குப் போதிய பணம் சேர்த்துவிட்டேன். இங்கே எனக்கு வேதாகமம் கிடைக்குமா? என்று பாஸ்டரிடம் கேட்டாள். உனக்குச் சொந்தமாக வாங்கிக் கொள்வதற்கு, இந்த வட்டாரத்தில் எங்கும் விற்பனைக்கான வேதாகமம் இல்லையே என்று சொல்லிவிட்டு மேரியின் முகத்தை நோக்கிப் பார்த்தார். அவள் சோர்ந்து போகவேயில்லை. மிகுந்த நம்பிக்கையோடு காணப்பட்டாள். உனக்குச் சொந்தமாக வேதாகமம் வாங்க வேண்டுமானால் "பாலா" என்ற இடத்திற்குச் செல்ல வேண்டும். அது இங்கிருந்து 25 மைல் தொலைவிலுள்ளது. அங்கு Rev. தாமஸ் சார்லஸ் என்பவரிடம் வேல்ஸ் மொழியில் விற்பனைக்குச் சில வேதாகமங்கள் உண்டு என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அது மேடு பள்ளங்களும், கரடு முரடான பாதைகளும் கொண்ட மலைப்பிரதேசம். நீ தனிமையில் அவ்வளவு தூரம் நடந்து போக முடியாது என்றார் பாஸ்டர். மேரி வீட்டிற்குத் துரிதமாகத் திரும்பிவந்து, தன் அம்மாவிடம், அம்மா "பாலா" என்ற கிராமத்தில் Rev. தாமஸ் சார்லஸ் என்பவரிடம் வேதாகமம் விற்பனைக்கு இருக்கிறதாம், நான்



போய் வாங்கிவருகிறேன் என்று சொன்னாள். தாயார், அது 25 மைல் தொலைவிலுள்ளது. போக வர 50 மைல், நீ எப்படி நடக்க முடியும்" என்றார். அம்மா, நான் கடந்த 6 ஆண்டுகளாக ஒரு வேதாகமம் வாங்க எவ்வளவு பிரயாசப்படுகிறேன். ஆகவே 50 மைல் தூரம் எனக்கு ஒரு பொருட்டல்ல, "ஆண்டவர் என்னோடு வருவார்" என்றாள். தாயாருக்கு மேரியைத் தனியாக அனுப்புவது கடினமாயிருந்தாலும் மறுக்க மனதில்லை. எனினும், "ஆண்டவர் உன்னோடிருப்பார்" என்று ஆசீர்வதித்து அனுப்பி வைத்தார்.

## மேரி ஜோன்ஸின் பாலா பயணம்:

மறுநாள் அதிகாலை மேரி ஜோன்ஸ் வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ள தனது பயணத்தைத் தொடங்கினாள். அந்த கரடுமுரடான கடினமான பாதையில் ஷூ போட்டு நடந்து, ஷூவைப் பாழாக்கிவிடக்கூடாது என்றெண்ணி ஷூ அணியாமல் வெறுங்காலோடே நடக்கத் தீர்மானித்தாள். ஆனால் "பாலா" போய்ச் சேரும்போது அவளது கால்பாதங்கள் சிவந்து வீங்கிப் போய் காணப்பட்டது. ஆனாலும் வேதாகமத்தை வாங்கச் செல்லும்போது கம்பீரமாக நின்று வாங்க வேண்டும் என்றெண்ணி ஷூவை மாட்டிக்கொண்டாள்.

பாலா வந்தடைந்து, Rev. தாமஸ் சார்லஸ் அவர்களுடைய வீட்டை விசாரித்து, கண்டுபிடித்து வீட்டின் கதவைத் தட்டினாள். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு Rev. தாமஸ் சார்லஸ் கதவைத் திறந்தார். மிகவும் களைத்துப்போய், அழுக்கான உடையில் ஒரு வாலிபப் பெண் நிற்பதைக் கண்டார். ஐயா, மன்னிக்க வேண்டும். இங்கு வருவதற்கு 25 மைல் நடந்து வந்திருக்கிறேன். 6 ஆண்டுகளாக சிறுக, சிறுகப் பணம்சேர்த்து தங்களிடம் வேல்ஸ் மொழி வேதாகமம் விற்பனைக்கு வைத்திருப்பதை அறிந்து அதை வாங்க வந்திருக்கிறேன் என்று பணிவோடு கூறினாள். அவள் களைத்து வந்திருக்கும் தோற்றத்தையும், அவள் கூறுவதையும் கேட்டுப் பரிவோடு உள்ளே அழைத்து, தனது உதவியாளரிடம் அவளைச் சமையலறைக்கு அழைத்துச்சென்று சாப்பிடக் கொடுக்கச் சொன்னார். மேரி ஜோன்ஸ்க்கு மிகுந்த மகிழ்ச்சி. Rev. தாமஸ் சார்லஸ் என்னிடம் ஒரேயொரு வேதாகமம்தான் உள்ளது. ஆனால் அதையும் நான் வேறு ஒருவருக்கு தருவதாக வாக்களித்துவிட்டேன். அந்த வாடிக்கையாளரை நான் ஏமாற்றிவிடக்கூடாதே என்றார். இதைக் கேட்ட மாத்திரத்தில் அடக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு மேரி ஜோன்ஸ் அழுதுவிட்டாள். அதைப் பார்த்த Rev. தாமஸ் சார்லஸ், வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ள, எவ்வளவு தூரம் தன்னை வருத்தி நடந்துவந்து இவ்வளவு தியாகம் செய்கிறாளே என்று நினைத்து தனது மனதை மாற்றிக்கொண்டார். மேரி அழாதே! உன் கண்ணீரைத் துடைத்துக்கொள். என்னிடமிருக்கும் ஒரு வேதாகமத்தை நான் உனக்குத் தருகிறேன். "வேதாகமத்தைப் பெற்றுக்கொள்ள இவ்வளவு தியாகம் செய்த உன்னை நான் வெறுங்கையாக அனுப்பக்கூடாது" என்று சொல்லி புத்தம் புதிய வேல்ஸ் மொழி வேதாகமத்தை அவளுக்குக் கொடுத்தார். இப்பொழுதும் அவள் கண்ணீர் நிற்கவில்லை, இது ஆனந்தக் கண்ணீர். ஆண்டவர் அவளுடைய நீண்ட நாளைய ஜெபத்தைக் கேட்டு, அவளது விருப்பத்தை நிறைவேற்றினார். மேரி ஜோன்ஸ் அவர் கொடுத்த வேதாகமத்தைப் பெற்றுக்கொண்டு, நீண்ட நேரம் அந்த வேதாகமத்தையே உற்று நோக்கிக்கொண்டிருந்தாள். பின்னர் அதை அவளது நெஞ்சோடு அணைத்து Rev. தாமஸ் சார்லஸ் அவருக்கு நன்றியைத் தெரிவித்தாள். அதிக நேரம் ஆகிவிட்டபடியால், Rev. தாமஸ் சார்லஸ் அன்று இரவு அவளை அங்கேயே தங்க வைத்து, மறுநாள் காலை மகிழ்ச்சியோடு அனுப்பி வைத்தார்.

வேதாகமத்தைப் பெற்றுக்கொண்ட மேரி ஜோன்ஸ் அதைத் தன் நெஞ்சோடு அணைத்துக்கொண்டு மீண்டும் 25 மைல் தூரம் நடந்து வீட்டிற்குத் திரும்பினாள். வேதாகமத்தோடு திரும்பிவந்த மகளை அவளது தாயார் கட்டியணைத்து முத்தமிட்டார். அவளது பள்ளி ஆசிரியர் Mr. இவான்ஸ் மற்றும் அவரது மனைவி இருவரும் அவளது விடாமுயற்சியைப் பாராட்டினார்கள். அயலகத்தாரும் வந்து அந்த வேதாகமத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். அந்த நேரங்களிலெல்லாம் தனது இருதயத்தின் ஆழத்திலிருந்து "நன்றி இயேசுவே" என்று மவுனமாக மனதிற்குள் சொல்லிக் கொண்டேயிருந்தாள். மேரி ஜோன்ஸ் வேதாகமத்தைத் தான் கற்றுக்கொண்டது மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் கற்றுக்கொடுத்து, அநேகரை ஆண்டவரண்டைக்கு வழி நடத்தினாள். மேரி ஜோன்ஸ் உபயோகித்த வேதாகமம் இப்போது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.



## மேரி ஜோன்ஸின் இச்செயல் ஒரு முடிவல்ல, ஆரம்பமே:

வேதாகமத்தைக் கொடுத்த Rev. தாமஸ் சார்லஸ், இந்தச் சிறிய பெண்ணின் விடாமுயற்சியையும், ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் எண்ணி ஆச்சரியமடைந்தார். ஏழ்மையின் மத்தியிலும் தொடர்ந்து 6 ஆண்டுகள் பணம் சேர்க்கும் மனப்பாங்கு, பாலா கிராமத்தைத் தேடி போய் வர 50 மைல்கள் மலைப்பிரதேசத்தில் மேடுபள்ளம், கரடுமுரடான பாதையில் தனிமையில் நடந்த மன தைரியம் இவைகளெல்லாம் மறக்க முடியாதவைகள். Rev. தாமஸ் சார்லஸ் இச்சம்பவத்தை அநேகருக்குப் பகிர்ந்துக்கொண்டதோடு, மேரி ஜோன்ஸைக் குறித்து இங்கிலாந்தில் நடந்த ஒரு கூட்டத்திலும் பேசினார். அது அநேகருடையக் கவனத்தை ஈர்த்ததோடு, அவர்களுடைய இருதயத்தில் ஆக்கப்பூர்வமான எழுச்சியையும் உருவாக்கிற்று. இதன்விளைவு, எல்லா தேசங்களிலும் அவரவர்களுடையத் தாய்மொழியில் வேதாகமம் கிடைக்க வேண்டும் என்று அநேக தேவமனிதர்கள் ஜெபிக்க ஆரம்பித்தனர். அதன் காரணமாக மேரி ஜோன்ஸ் வாழ்ந்த காலத்திலேயே (1804ஆம் ஆண்டு) பிரிட்டிஷ் மற்றும் அயல்நாடுகளுக்கான வேதாகமச் சங்கம் (British and Foreign Bible Society) முதல்முதலில் Rev. தாமஸ் சார்லஸ் மற்றும் சிலரால் இணைந்து ஆரம்பிக்கப்பட்டது. பின் மற்ற நாடுகளிலும் வேதாகமச் சங்கங்கள் உருவாக ஆரம்பித்தன.

## மேரி ஜோன்ஸின் நினைவுத்தூண்:

பிரிட்டிஷ் வேதாகமச் சங்கம், ஆரம்பித்த 100 ஆண்டுகளுக்குள்ளாக 200 மில்லியன் வேதாகமங்களைப் பல்வேறு மொழிகளில் அச்சிட்டு விநியோகித்திருக்கிறது. 1882இல் "மேரி ஜோன்ஸின் கதையும், அவளது வேதாகமமும்" (The Story of Mary Jones and her Bible) என்ற தலைப்பில் முதல்முறையாக ரோப்ஸ் மேரி எமில் அம்மையார் ஒரு சிறிய புத்தகமாக எழுதியதை, லண்டன், பிரிட்டிஷ் மற்றும் அயல்நாடுகளுக்கான வேதாகமச் சங்கம் வெளியிட்டது. அதைத் தொடர்ந்து மேரி ஜோன்ஸைக் குறித்து அநேக புத்தகங்கள் வெளியாயின. மேரி ஜோன்ஸ் வாழ்ந்த சிற்றூரில் அழிந்துக் கிடந்த அவர்களது வீட்டின் இடத்தில் அவளுடைய நினைவாக நினைவுத்தூண் ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளது. அதை மெரியோநெத் ஞாயிறுப்பள்ளி (The Sunday School of Merioneth) அமைப்பினர் நிறுவியுள்ளனர். அந்த நினைவுத்தூணில் கீழ்க்கண்ட வாசகம் எழுதப்பட்டுள்ளது.

*In memory of Mary Jones, Who in the year 1800,*
*At the age of 16 walked from here to Bala,*
*To procure from the Rev. Thomas Charles, B.A. A copy*
*of the Welsh Bible. This incident was the occasion of the*
*formation of the British and Foreign Bible Society.*
*Erected by the Sunday Schools of Merioneth.*

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்ளுவதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும்." (யோவான் 15:7)

# ஆபகூக்

MR. ISAAC KAMALESH



நீதிமானுக்குத் துன்பங்களும், தொல்லைகளும் ஏன் வருகிறது? துன்மார்க்கன் செழித்தோங்குவது ஏன்? துன்மார்க்கனுக்குத் துன்பம் உடனடியாக வருவது கிடையாது எப்படி? இது போன்ற எண்ணற்றக் கேள்விகள் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கிறது. அதே கேள்விதான் இந்த புத்தகத்தின் ஆக்கியோன் ஆபகூக்குக்கும் இருந்தது. ஆபகூக் என்றால் தழுவிக்கொள்ளுதல் (EMBRACE) என்று அர்த்தம். இதன் மூல அர்த்தம் விடாப்பிடியாக பிடித்துக்கொண்டு ஒன்றை அடையும்வரை தழுவுதல் என்ற அர்த்தத்தில் வரும். இவன் பெயருக்கேற்ற ஊழியத்தைச் செய்திருக்கிறான்.

இந்தத் தீர்க்கதரிசி செய்த ஊழியப்பகுதி தெற்கத்திய ராஜ்யமாகிய, அதாவது யூதா ராஜ்யம் ஆகும். இங்கே இவர் தீர்க்கதரிசனம் உரைத்தார் என்று சொல்லுவதை விட, எழுதி வைத்தார் என்று சொல்லுவது மிகச் சரியானது. இவருடைய காலம் என்று பார்க்கும்பொழுது அதை நாம் 2 இராஜாக்கள் 22 முதல் 24 வரை மற்றும் 2 நாளாகமம் 34 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் காணலாம். இவருடைய காலங்களில் ராஜ்யபாரம் பண்ணினவர்கள் என்று பார்க்கும் பொழுது யோசியா, யோயாக்கீம் என்பவர்களுடைய காலங்கள் என்று வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இது வேதத்தின் 35வது புத்தகம். வெறும் மூன்று அதிகாரங்களையும், 56 வசனங்களையும் கொண்ட இந்த புத்தகத்தில் எந்த ஒரு வாக்குத்தத்தமும் இல்லை என்று சொல்லலாம். இது தீர்க்கன் இரண்டு கேள்விகளைக் கேட்பதும், அதற்கான கடவுளின் இரண்டு பதில்களும் உள்ளடக்கிய ஒரு பாடல். இந்த தீர்க்கனைக் குறித்து இன்னும் அறிய வேண்டுமென்றால், இவன் லேவி கோத்திரத்திலுள்ள இசைக் கலைஞனாக அல்லது ஆலய பாடகர் குழுத் தலைவனாக இருந்திருக்கலாம் என்ற செய்தியும் நமக்குத் தோன்றுகிறது. காரணம் இரண்டாம் அதிகாரத்தின் முதல் வசனமும், இந்த புத்தகத்தின் கடைசி வசனத்திற்கு கீழ், வசன எண் இல்லாமல் குறிப்பிடப்பட்டுள்ள நெகினோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்கப்பட்ட ராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம். இந்த வசனத்தில் நம்பர் இல்லாததால் பெரும்பாலானோர் வாசிப்பது கிடையாது. ஆனால் இதன் முக்கியத்துவம் இதுதான், இந்த முழு சங்கீதத்தின் உச்சகட்டமாக இருக்கிறது என்று சொன்னால் மிகையாகாது.

இஸ்ரவேல் ராஜ்யம் பிரிந்த பிறகும், யூத ராஜ்யம் செழித்தோங்கியிருந்தது. அதுவும் உசியா ஆண்ட 52 ஆண்டுகள் சமுதாய, சமய பொருளாதார செழிப்பு காணப்பட்டது. இதன் காரணமாக ஜனங்கள் மத்தியில் ஒரு எண்ணம் நம்முடைய செல்வ செழிப்புக்குக் காரணம், நாம் கடவுளிடம் உண்மையாக இருப்பது அல்லது கடவுள் மேலுள்ள பக்தியினால் மற்றும் நாம் நீதிமான்கள் இப்படிப்பட்ட எண்ணங்கள் இருந்தது. ஆனால் தீர்க்கனின் உள்ளம் அல்லது எண்ணம் என்னவென்றால், ஜனங்கள் வேதத்தை மறக்கிறார்கள், பண்டிகைகளைச் சடங்காச்சாரமாக செய்கிறார்கள். செல்வச் செழிப்பை வைத்து தேவன் நம்மோடு இருக்கிறார் என்று கனவுக் காண்கிறார்கள். இதன் மத்தியில் தேவனுடைய தீர்ப்பு என்ன? என்பதுதான். காரணம் அவனுடைய தலைமுறையில் வடக்கத்திய ராஜ்யத்தை அசீரியர்கள் பிடித்து, அதை ஒன்றுமில்லாமல் தாறுமாறாக்கினார்கள். இப்பொழுது தீர்க்கன் மட்டுமல்ல, யூதா கோத்திரத்தின் ஜனங்களுக்கும் ஒரு எண்ணம், தேவன் நம்மை அசீரியர்களைக் கொண்டோ அல்லது எதிரிகளைக் கொண்டோ அழிக்கமாட்டார். நம்மைத் தேவன் கைவிட மாட்டார். காரணம் எருசலேம் தேவனுடைய நகரம். அதுமட்டுமல்ல, ஆலயமும் இருக்கிறது. ஆதலால் தேவனுடைய நகரத்தையும், அவருடைய ஆலயத்தையும் பிடிப்பதற்கும், அடிமைப்படுத்துவதற்கும் தேவன் ஒருவரையும் அனுமதிக்கமாட்டார் என்ற எண்ணம் தலைத்தூக்கியது. இவைகளையெல்லாம் மனதில் வைத்து தீர்க்கன் கேட்ட முதல் கேள்வி முதல் அதிகாரத்திலும், அதில் தேவனுடைய பதிலும் உள்ளது. இதில் தேவனின் பதில் திடுக்கிட வைத்தது. காரணம், தேவன் யூதாவிற்கு கல்தேயர்களை அனுப்புவார் என்பதும், பாபிலோனியர்கள் தேவனுடைய ஜனங்களை அடிமைப்படுத்துவார்கள் என்பதும் பெரிய திகைப்பு. தொடர்ந்து இரண்டாம் கேள்வியை முதல் அதிகாரத்தில் ஆரம்பிக்கிறார். இரண்டாம் அதிகாரம் கடவுளின் பதில்களால் நிறைந்திருக்கிறது. தரிசனத்தை எழுதி வை என்பது தேவனுடைய பதில். அதுவும் ஒரு பாடலாக, மகிழ்ச்சியும், சந்தோஷமும் நிறைந்துள்ள ஒரு ராகமாக எழுதப்பட்டிருக்கிறது. மூன்றாவது தேவன் தந்த தரிசனத்தின் அடிப்படையில் ஒரு உயர்மட்ட பாடலாக உள்ளது.

இப்பொழுது இந்த மூன்று அதிகாரத்திற்குள்ளும் இருக்கிற சாராம்சத்தைப் பார்ப்போம். இந்தப் புத்தகத்தை இரண்டு பிரிவாக பிரித்தால் முதல் பகுதி சந்தேகங்களும், குழப்பங்களும் நிறைந்ததாயும், இரண்டாம் பகுதி அதாவது மூன்றாம் அதிகாரம் நம்பிக்கை தரும் பாடலாகவும் அமைந்திருக்கிறது. இப்பொழுது அதிகாரங்களை ஒவ்வொரு தலைப்பின் கீழ் வாசிக்கலாம். இந்த முன்னுரையைக் கொண்டு, இந்த புத்தகத்தை இரண்டு முறை வாசித்து பாருங்கள். நாம் அதிகம் பயன்படுத்துகிற இரண்டு மூன்று வசனங்கள் அடைப்புக்குள் உள்ளது (1:13, 2:3, 4, 14, 3:17, 18, 19). அதையும் வாசித்துக்கொள்ளுங்கள்.

ஆபகூக் புத்தகத்திற்கு ஒரு தலைப்பு கொடுக்க வேண்டும் என்றால் விசுவாசம் சோதிக்கப்படுதல் (Faith Under Fire). முதல் அதிகாரம் விசுவாசம் பரிசோதிக்கப்படுவது (Faith Tested), இரண்டாம் அதிகாரம் விசுவாசம் கற்பிக்கப்படுகிறது (Faith Taught). மூன்றாம் அதிகாரம் விசுவாசம் ஜெயத்தொனியாக பாடப்படுகிறது (Faith Triumphant).

முதல் அதிகாரம் பாழடைதல் (Desolation), இரண்டாம் அதிகாரம் வெளிப்பாடு (Revelation), மூன்றாம் அதிகாரம் உயர்த்தப்படுதல் (Exaltation) என்ற தலைப்பின் கீழ் இருக்கும். முதல் அதிகாரத்தில் கடவுள் அலட்சியமாக இருக்கிறார் (1-11) (God is Indifferent), கடவுள் நிலையற்றவர் (12-17) (God is inconsistent) என்றும், இரண்டாம் அதிகாரத்தில் கடவுளின் தரிசனம் (1-3) (God's Vision), கடவுளின் வார்த்தையை நம்புதல் (4-5) (Trust God's Word), கடவுளின் நியாயத்தீர்ப்பை அறிவித்தல் (6-20) (Declare God's Judgment) என்றும், மூன்றாம் அதிகாரத்தில் கடவுளை நோக்கி ஜெபித்தல் (1-2) (Pray to God), கடவுளின் வழிகளைச் சிந்தித்து அறிதல் (3-15) (Ponders to God way), கடவுளைத் துதித்தல் (16-19) (Praise God) என்றும் உள்ளது.

இந்த தீர்க்கதரிசி தான், யூதா சிறைப்பட்டு போகும் முன் தீர்க்கதரிசனம் அளித்த கடைசித் தீர்க்கதரிசி என்று சொல்ல முடியும். தம்பி, தங்கை! கடவுளுடைய வழி வித்தியாசமானது தான். ஆனாலும் அதன் முடிவு ஜெயத்தொனியாக இருக்கும் என்பது தான் இந்த புத்தகத்திலிருந்து நாம் அறிந்துக் கொள்ளவேண்டியது. இந்த புத்தகத்தை வாசித்து, தேவ சத்தியத்தை அறிந்துக்கொள். ஆமென்!

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## உச்சானா
## ஜிந்த் மாவட்டம்
## ஹரியானா

Mr. Suriya Kumar

**அறிமுகம்:**

உச்சானா என்பது ஹரியானா மாநிலத்தின் ஜிந்த் மாவட்டத்தில் உள்ள ஒரு தாலுகா (Tehsil) ஆகும். உச்சானா டெல்லியிலிருந்து 141 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. 18ஆம் நூற்றாண்டில் இது முதல் சீக்கிய ராஜ்யங்களில் ஒன்றாக இருந்தது. ஜிந்த் மாவட்டம் ஹரியானாவின் மையப்பகுதியாகும். இது மகாபாரதத்தில் தன் வேர்களைக் கொண்டுள்ளது. அதனால் தான், வெற்றிக் கடவுளுக்காக பாண்டவர்களால் கட்டப்பட்ட ஜெயந்தி தேவி கோவில் மற்றும் பாண்டவர்கள் தங்களது முன்னோர்களுக்கு வழிபாடு செய்த பாண்டு பிண்டாரா போன்ற இடங்களை நாம் இங்கு காண முடிகிறது.

ஹரியானாவின் ஜிந்த் மாவட்டத்திலுள்ள உச்சானா ஒன்றியம் மற்றும் நகரத்தின் மொத்த சமூக மேம்பாட்டு ஒன்றிய மக்கள் தொகை 2,07,050 ஆகும். அதே சமயம் உச்சானா நகராட்சி மன்ற நகரத்தின் மக்கள் தொகை 16,815 ஆகும்.

1. இந்த பகுதியில் மொத்த 47கிராமங்கள் உள்ளன.
2. உச்சானா 15,000க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட பெரிய நகரமாக உள்ளது.

**சமூகம்:**

- நகர எழுத்தறிவு விகிதம்: 74.78% (ஆண்கள் 82.63% மற்றும் பெண்கள் 66.02%)
- தாலுகா ஆண்களின் எழுத்தறிவு சதவீதம்: 57%
- தாலுகா பெண்களின் எழுத்தறிவு சதவீதம்: 46%
- நகர பாலின விகிதம்: 1,000 ஆண்களுக்கு 896 பெண்கள்
- பாலின விகிதமானது பெண் சிசுக்கொலை மிகவும் பொதுவாக இங்கு நடக்கிறது என்பதை நேரடியாக உணர்த்துகிறது.

உச்சானா கலான் கிராமத்தில் 37 வயது பெண் ஒருவர் பத்து பெண் குழந்தைகளுக்குப் பிறகு ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுத்துள்ளார். திருமணமாகி 19 வருடங்களான ஒரு பெண், ஜிந்த் மாவட்டத்திலுள்ள உச்சானா நகரத்தில் இருக்கும் ஓஜஸ் மருத்துவமனை மற்றும் மகப்பேறு இல்லத்தில் தனது 11 வது குழந்தையைப் பெற்றெடுத்தார். இது ஆண் ஆதிக்கம் நிறைந்த பெண்களை விட ஆண்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் மனப்பான்மையை அவர்கள் எவ்வளவு ஆழமாகப் பின்பற்றுகிறார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஜாட் சமூக மக்கள் இங்குள்ள முக்கியமான மக்கள் குழுவாவர்; இவர்கள் முக்கியமாக விவசாய நில உரிமையாளர்களாக உள்ளனர்.

பட்டியலின மக்கள் உச்சானா குர்த் கிராமத்தில் 23.7% ஆகவும், நகரத்தில் 16% ஆகவும் உள்ளனர். வால்மீகி, சமார் மற்றும் தனக் ஆகியவை முக்கிய பட்டியலின மக்கள் குழுக்களாகும்.

**வால்மீகி மக்கள் - ஆன்மீகம்:**

**உச்சானா நகரத்தின் மக்கள்தொகை விவரம்:**

- மொத்த மக்கள் தொகை: 16,815 (2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பு)
- இந்து மதம்: 95.99%
- இஸ்லாம் மதம்: 2.72%
- கிறிஸ்தவ மதம்: 0.08% (தோராயமாக 14 நபர்கள்)
- சீக்கிய மதம்: 0.15%
- ஜைனம் மற்றும் இதர மதங்கள்: 1.06% (ஒன்றாக சேர்த்து)

16 ஆயிரம் மக்கள் தொகையில் 14 கிறிஸ்தவர்கள் மட்டுமே இருக்கும் ஒரு தாலுகாவிற்கு நீங்கள் வருவீர்களா?

**சாதகமான அம்சங்கள்:**

1. நகரத்தில் எழுத்தறிவு விகிதம் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளது. இது புத்தக / இலக்கிய ஊழியத்திற்கு (Literature Ministry) வழிவகுக்கிறது. ஹரியான்வி புதிய ஏற்பாடு (Haryanvi New Testament) ஒரு நல்ல கருவியாக இருக்கலாம்.
2. இந்த மக்கள் குரு இயக்கங்களின் சத்சங்கங்களில் (பஜனை நிகழ்ச்சிகள்) அதிக ஆர்வம் காட்டுவதால், கிறிஸ்தவ சத்சங்கங்கள் ஒரு நல்ல மாற்றாக இருக்கலாம்.

**ஜெபிக்க வேண்டிய காரியங்கள்...**

1. வாலிபர்களுக்கு இந்த பணித்தளத்திற்கு (Field) வருவதற்கான ஆர்வம் எழும்ப ஜெபியுங்கள்.
2. விவிலியக் (பைபிள்) கதைகள் மீது ஆர்வம் அதிகரிக்க ஜெபியுங்கள்.
3. இங்கு பெண் சிசுக்கொலை முற்றிலும் நிறுத்தப்பட ஜெபியுங்கள்.





# கொலம்பியா



கொலம்பியா, அதன் பன்முக நிலப்பரப்புகள், வளமான கலாச்சார பாரம்பரியம், காபி (Coffee) உற்பத்தி மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்காக அறியப்பட்ட ஒரு துடிப்பான தென் அமெரிக்க நாடாகும். கொலம்பியா "தென் அமெரிக்காவின் நுழைவாயில்" என்று செல்லப்பெயர் பெற்றது.

| | |
|---|---|
| தலைநகரம் | : பொகோட்டா |
| மொழி | : ஸ்பானிஷ் |
| அரசியல் அமைப்பு | : ஜனாதிபதி குடியரசு |
| மக்கள் தொகை | : 53 மில்லியன் |

**மதக் கண்ணோட்டம்:**

- கொலம்பியர்களில் சுமார் 75-80% பேர் தங்களை ரோமன் கத்தோலிக்கர்கள் என்று அடையாளப்படுத்திக் கொள்கிறார்கள், ஏனெனில் இதுவே அங்குள்ள மிகப்பெரிய மதப்பிரிவாகும், மேலும் புராட்டஸ்டன்ட் / எவாஞ்சலிக்கல் சமூகத்தினரின் மக்கள் தொகையும் வளர்ந்து வருகிறது.
- மக்கள்தொகையில் ஏறத்தாழ 10-12% பேர் தங்களுக்கு எந்த மதச் சார்பும் இல்லை (நாத்திகர்) என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர்.
- பொகோட்டாவின் முதன்மை கத்தோலிக்கப் பேராலயம் என்பது, கன்னி மரியாளின் பிறப்பிற்கு அர்ப்பணிக்கப்பட்டு புனித பேதுருவின் தலைமையில் இயங்கும் ஒரு கத்தோலிக்க வழிபாட்டுப் பேராலயமாகும். இது நாட்டின் தலைநகரான பொகோட்டாவில் உள்ள பிளாசா டி பொலிவரில் அமைந்துள்ள ஒரு நியோகிளாசிக்கல் பாணிக் கட்டிடமாகும் (Neoclassical style building). கொலம்பியக் குடும்ப வாழ்க்கை, கலாச்சாரம் மற்றும் சமூகக் கொண்டாட்டங்களில் கத்தோலிக்கக் கிறிஸ்தவம் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

**சிறப்பு நிகழ்வுகள்:**

கத்தோலிக்கத் திருச்சபையின் சர்வதேச மாநாடு மற்றும் பொகோட்டாவின் 7வது சர்வதேச கிறிஸ்தவத் திரைப்பட விழா ஆகியவை, 2026 ஆகஸ்ட் மாதம் கொலம்பியாவில் நடைபெறும் முக்கிய கத்தோலிக்க கிறிஸ்தவ நிகழ்வுகளில் அடங்கும். இந்த நிகழ்வுகள், பொது வாழ்வில் கத்தோலிக்கத் திருச்சபையின் செல்வாக்கு, அரசியல் ஈடுபாடு மற்றும் இளைஞர் இயக்கம் ஆகியவை குறித்த கலந்துரையாடல்களை வளர்ப்பதையும், அதே நேரத்தில் இளம் கிறிஸ்தவர்களிடையே விசுவாச அடிப்படையிலான உரையாடலையும், தலைமைத்துவத்தையும் ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

**கொலம்பியாவுக்கான ஜெபக் குறிப்புகள்:**

- இந்த நிகழ்வுகளின் மூலம் தேவன் கிறிஸ்தவ சமூகத்தைப் பலப்படுத்தி, இயேசுகிறிஸ்துவின் அன்பும், சத்தியமும் நிறைந்த உண்மையுள்ள தலைவர்களாக இளைஞர்களை உருவாக்கி வழிநடத்த ஜெபிப்போம்.
- சமீபத்திய ஆண்டுகளில் கொலம்பியா பல்வேறு துறைகளில் முன்னேற்றம் கண்டிருந்தாலும், பல சமூகங்கள் இன்றும் குற்றச் செயல்கள், கும்பல் நடவடிக்கைகள் மற்றும் வன்முறை தொடர்பான சவால்களைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகின்றன. வன்முறையால் பாதிக்கப்பட்ட சமூகங்களில் அமைதி நிலவவும், குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் பாதுகாக்கப்படவும், தலைவர்களுக்கு தேவன் ஞானத்தை அளிக்கும்படியாகவும், அந்த சமூகங்களில் நல்ல மாற்றம் ஏற்படவும் ஜெபிப்போம்.
- கொலம்பியாவில் போதைப்பொருள் துஷ்பிரயோகம், கடத்தல் மற்றும் சுரண்டலுக்கு ஆளாகக்கூடிய நிலையில் உள்ள குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக ஜெபிப்போம்.
- பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவன் குணமாக்குதலையும், மீட்பையும் அளிக்கும்படியாகவும், மறுவாழ்வு சேவைகள் வலுப்படுத்தப்படவும், அரசாங்கம் பயனுள்ள ஆதரவுத் திட்டங்களைச் செயல்படுத்தவும், திருச்சபைகள், பள்ளிகள் மற்றும் குடும்பங்கள் ஒன்றிணைந்து ஒவ்வொரு குழந்தையும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியாகவும் செழித்து வளரக்கூடிய பாதுகாப்பான சூழலை உருவாக்கவும் ஜெபிப்போம்.
- கொலம்பியா முழுவதும் சேவையாற்றும் மிஷனெரிகள், போதகர்கள், இளையத் தலைவர்கள் மற்றும் கிறிஸ்தவ அமைப்புகளுக்காக ஜெபிப்போம். குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் குடும்பங்களிடம் கிறிஸ்துவின் அன்பைப் பகிர்ந்துக்கொள்ளும்போது, பரிசுத்த ஆவியானவரால் உற்சாகப்படுத்தப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வல்லமையுடன் பயன்படுத்தப்பட ஜெபிப்போம்.

**"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு." (1 தீமோத்தேயு 4:12)**



# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இயக்கத்தின் கரிசனைகள்



*1968ஆம் ஆண்டு அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட நாள் துவங்கி, நமது இயக்கத்தை தேவராஜ்ய விரிவுப் பணியில் தேவன் வல்லமையாய்ப் பயன்படுத்தி வந்திருக்கிறார். முன்னோடி சுதேச மிஷனெரி இயக்கங்களில் ஒன்றாக மட்டுமல்ல, முன்மாதிரியான சங்கங்களில் ஒன்றாகவும் நாம் வாழ்ந்து செயல்பட தேவன் உதவி செய்துள்ளார். பல்வேறு கால கட்டங்களில் வெவ்வேறு விதமான சவால்களை மற்றும் சோதனைகளை மேற்கொள்ளவும், அதன் மத்தியில் தேவப்பிள்ளைகளாய் ஒருமித்து தேவனை மகிமைப்படுத்தவும் தேவன்தாமே உதவி செய்திருக்கிறார். தற்போது, முன்னெப்போதும் இல்லாத வகையில் ஊழியங்களிலும், நிர்வாகத்திலும் மிகக் கடினமான சவால்களையும், வீழ்ச்சியையும் நாம் சந்தித்து வருகிறோம். மாறிவரும் கால சூழ்நிலைகளில் நமது இயக்கத்திற்கு தேவகிருபை மிக அதிகமாக தேவை என்பதை உணருகிறோம். நாம் இணைந்து இயக்கத்தின் நல்வாழ்வுக்காக தேவ சமூகத்தில் மன்றாடி ஜெபிப்போம்.*

**ஜெபிக்க:**

- நமது இயக்கத்தின் தலைவர், உபத் தலைவர், பொருளாளர் மற்றும் பொதுக் காரியதரிசி ஆகியோர் ஜெபத்தோடும், ஒருமனதோடும், தேவ ஞானத்தோடும், தேவனுடைய வழி நடத்துதலோடும் நமது இயக்கத்தை முன்னெடுத்துச் செல்ல ஜெபிப்போம்.
- பொதுக்குழு, செயற்குழு, நிர்வாகக்குழு, நிதி மேலாண்மைக்குழு மற்றும் சொத்து பராமரிப்புக் குழுவின் அங்கத்தினர்கள் உண்மையோடும், விவேகத்தோடும், வெளிப்படைத் தன்மையோடும், தாழ்மையோடும் தேவ ஊழியத்தில் ஈடுபட ஜெபிப்போம்.
- பணித்தள பிராந்தியங்களில் பரவலாக காணப்படும் விசுவாசிகளின் பின்மாற்றம், சுதேச ஊழியர்களின் பின்மாற்றம் மற்றும் பற்றாக்குறை போன்ற சவால்களை மேற்கொள்ள தேவஞானம், வல்லமை போன்றவை இயக்கத்தின் தலைவர்களுக்கு நிறைவாக அருளப்பட ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தின் அச்சாணியாயிருக்கும் தேவராஜ்ய மதிப்பீடுகளுக்கு நிர்வாகத்திலும், ஊழியங்களிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட ஜெபிப்போம்.
- நிதி மேலாண்மை மற்றும் நிர்வாக காரியங்களில் அரசு வழிகாட்டுதல்கள், சட்டத்திட்டங்கள் முறையாகப் பின்பற்றப்படவும், அரசு அதிகாரிகளின் கண்களில் தேவன்தாமே தயவு கிடைக்கப் பண்ணவும் ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தின் ஊழியங்களிலும், நிர்வாகத்திலும் இளம் தலைமுறையினர் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளவும், தலைமுறை இடைவெளியினால் (Generation Gap) ஊழியங்களில் ஏற்படும் தொய்வுகள் தவிர்க்கப்படவும் ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஜெபக்குழு அங்கத்தினர்களின் விபரங்களைச் சேகரித்து மொபைல் ஆப் மூலம் பதிவேற்றம் செய்யப்படும் பணிகள் (Automation) குறித்த நேரத்தில் நிறைவுப் பெற ஜெபிப்போம்.
- தேவ ஊழியத்திற்கென்று ஜெபத்தோடும், தியாகத்தோடும் தரப்படும் காணிக்கைகள் முறையாக செலவழிக்கப்படவும், பண விரையங்கள் ஏற்படாது தேவன் காக்கவும் ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தின் தனித்தன்மை காக்கப்படவும், காலத்திற்கேற்ற மாற்றங்கள் தேவ ஒத்தாசையோடு செயல்படுத்தப்படவும் ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தின் ஊழியங்களுக்கு எதிராக செயல்படும் பிசாசின் கிரியைகள் முறியடிக்கப்பட ஊக்கமாய் ஜெபிப்போம்.
- தலைமைச் செயலகம், பணித்தளம் மற்றும் முன்னேற்றப்பணி ஆகிய மூன்று துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படவும், ஒவ்வொரு துறைக்கும் நியமிக்கப்பட்டுள்ள நிதியாண்டின் இலக்குகள் முழுமையாக நிறைவேற்றப்படவும் ஜெபிப்போம்.
- நமது இயக்கத்தின் ஊழியர்களுக்கு தேவையான நிதி ஆதாரங்களைத் தேவன் தரவும், அர்ப்பணமுள்ள ஜெப பங்காளர்களையும், ஊழியர்களையும் தேவன் எழுப்பித் தரவும் கருத்தாய் ஜெபிப்போம்.

Dr. Godwin & Dr. Azubha

# பராமரிப்பாளர் மன சோர்வு

## CAREGIVER SYNDROME



**என்ன?**

பராமரிப்பாளர் மன சோர்வு என்பது ஒரு குடும்ப உறுப்பினர், நண்பர் அல்லது நோயாளியை நீண்டகாலம் கவனித்துக்கொள்ளும் ஒரு நபர் அனுபவிக்கும் உடல் மற்றும் உணர்ச்சிப்பூர்வமான மன சோர்வு ஆகும். இது பொதுவாக வயதான பெற்றோர்கள், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், மாற்றுத்திறனாளிகள் அல்லது முதுமை மறதி (Dementia) உள்ளவர்களைப் பராமரிப்பவர்களைப் பாதிக்கிறது.

**ஏன்?**

பராமரிப்பாளர்கள் பின்வரும் சூழ்நிலைகளை எதிர்கொள்ளும்போது இந்நோய் உருவாகிறது:

- ✦ போதிய ஓய்வின்றி நீண்ட காலத்திற்குப் பராமரிப்பு வழங்குவது.
- ✦ நோயாளியின் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்ய தாங்களே பொறுப்பு என்று நினைப்பது.
- ✦ சொந்த உடல்நலம் மற்றும் தனிப்பட்ட தேவைகளைப் புறக்கணிப்பது.
- ✦ நிதி அல்லது குடும்ப அழுத்தங்களை அனுபவிப்பது.
- ✦ சமூக அல்லது உணர்ச்சிப்பூர்வமான ஆதரவு குறைவாக இருப்பது.
- ✦ தாங்கள் நேசிக்கும் ஒருவரின் உடல்நிலை படிப்படியாக மோசமடைவதைக் கண்முன்னே காண்பது அவர்களின் மன வலிமையைக் குறையச் செய்கிறது.

**எப்படி? (அறிகுறிகள்)**

- ✦ உடல் ரீதியான அறிகுறிகள்: தொடர்ச்சியான சோர்வு மற்றும் ஆற்றல் இல்லாமை, அடிக்கடி ஏற்படும் தலைவலி, தூக்கமின்மை அல்லது அதிகப்படியான தூக்கம், உடல் மற்றும் தசை வலி, நோய் எதிர்ப்புச் சக்தி குறைவதால் அடிக்கடி நோய்வாய்ப்படுதல், பசி மற்றும் எடையில் ஏற்படும் மாற்றங்கள்.
- ✦ உணர்ச்சி ரீதியான அறிகுறிகள்: மன அழுத்தம் அல்லது திகைப்பு (Overwhelmed) மற்றும் தவிப்பு, பதற்றம் மற்றும் அதிகப்படியான கவலை, மனச்சோர்வு அல்லது தொடர்ச்சியான சோகம், எரிச்சல் அல்லது கோபம், மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள் (Mood swings), தமக்காக நேரம் ஒதுக்கும்போது ஏற்படும் குற்ற உணர்ச்சி.
- ✦ மன ரீதியான அறிகுறிகள்: கவனக் குறைவு, மறதி, தவறான முடிவுகளை எடுத்தல், உணர்ச்சியற்ற நிலை.
- ✦ நடத்தை ரீதியான அறிகுறிகள்: சமூகத்திலிருந்து ஒதுங்குதல், பொழுதுபோக்குகளில் ஆர்வம் இழத்தல், மது, புகையிலை அல்லது பிற பழக்கங்களுக்கு அடிமையாதல், தனிப்பட்ட சுகாதாரம் அல்லது மருத்துவச் சந்திப்புகளைப் புறக்கணிப்பது.

**இதற்குச் சிகிச்சை உண்டா?**

ஆம். பராமரிப்பாளர்கள் தங்களின் கடும் சோர்வு அல்லது மன அழுத்தக் காலத்தில் (Burnout phase) குடும்ப உறுப்பினர்களிடம் உதவி கேட்க வேண்டும். எல்லாவற்றையும் தனியாகவே செய்ய முயலக்கூடாது. சத்தான உணவுகளை உண்பது, வழக்கமான உடற்பயிற்சி மற்றும் போதுமான தூக்கத்தைப் பெறுவதன் மூலம் தங்கள் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். நண்பர்கள், குடும்பத்தினர், ஆலோசகர்கள் அல்லது பராமரிப்பாளர் ஆதரவுக் குழுக்களுடன் பேசுவதன் மூலம் உணர்ச்சிப்பூர்வமான ஆதரவைத் தேட வேண்டும். தங்களின் பராமரிப்புப் பணிகளுக்கு இடையே பொழுதுபோக்குகளுக்காக நேரம் ஒதுக்க வேண்டும்.

**ஜெபக்குறிப்புகள்:**

1. அவர்கள் உடலளவிலும், மனதளவிலும் சோர்வடையும் போது, அவர்களின் பெலனைக் கர்த்தர் புதுப்பிக்கும்படி...
2. நோயாளிகளுக்குத் தொடர்ந்து அன்போடு சேவை செய்வதற்குத் தேவையான இரக்கம், பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையைக் கர்த்தர் அவர்களுக்குத் தரும்படி...
3. பொறுப்புகளைப் பகிர்ந்துகொண்டு, அன்பிலும், ஒற்றுமையிலும் இணைந்து செயல்படக்கூடிய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் பிற பராமரிப்பாளர்களை கர்த்தர் எழுப்பித் தரும்படி...
4. சரியான முடிவுகளை எடுப்பதற்கும், எதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை அறிவதற்கும், எப்போது உதவி நாட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வதற்கும் தேவையான ஞானத்தைக் கர்த்தர் அவர்களுக்குத் தரும்படி...
5. மன அழுத்தம், தனிமை, ஏமாற்றம் மற்றும் துக்கத்தினால் ஏற்பட்ட ஒவ்வொரு காயத்தையும் கர்த்தர் குணமாக்கும்படி...
6. அவர்களின் இதயத்தை மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் தைரியத்தால் கர்த்தர் நிரப்பும்படி ஜெபிப்போம்.

விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## அருட்திரு. எட்வர்ட் பிரபுதாஸ்



அருட்பணியாளரின் அறிமுகம்: எனது பெயர் எட்வர்ட் பிரபுதாஸ். எனது பெற்றோர் திருச்சபையில் போதகர்களாகப் பணியாற்றினர். எனது பள்ளிப்படிப்பு முடிந்தபின் ஓராண்டு இறையியல் படித்து, 1975இல் OMS என்ற ஸ்தாபனத்தில் நான்கு ஆண்டுகள் சுவிசேஷகனாகப் பணியாற்றினேன். பின்னர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 1980 முதல் 2019 வரை முழு நேர ஊழியனாகப் பணியாற்றி ஓய்வுப் பெற்றுள்ளேன். நான் இறையியல் கல்வியில் B.Th., BD என்ற பட்டங்களைப் பெற்று, குருத்துவ அபிஷேகமும் பெற்றுள்ளேன். எனது மனைவியின் பெயர் ஸ்டெல்லா எட்வர்ட். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். நானும் எனது மனைவியும் இணைந்து இன்றுவரை எங்கள் பகுதியிலுள்ள FMPB ஜெபக்குழுவிலும், திருச்சபை ஊழியங்களில் அருட்பணியாளருக்கு உதவியாகவும் கர்த்தருடைய பணியைச் செய்துவருகிறோம். ஏறத்தாழ 51 ஆண்டு காலம் இந்தியாவின் பெரும்பாலான மாநிலங்களில் மிஷனெரி ஊழியம் செய்து வந்துள்ளேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்போது ஏற்பட்டது?**

அருட்பணியாளரின் பதில்: நான் உயர்நிலைப்பள்ளி படிப்பை முடித்தபின் எனக்கு Benny கம்பெனியில் காண்ட்ராக்டராக பணி கிடைத்தது. எனது தந்தை ஒரு போதகராயிருந்தும், நான் பல உலக காரியங்களில் ஈடுபட்டு, கர்த்தரை விட்டுத் தூரமானேன். எனது பணியில் ஒழுக்கமின்மை காரணமாக பணியைவிட்டு அகற்றப்பட்டேன். அதன் பின்பு மிகுந்த மனச்சோர்வு ஏற்பட்ட நேரத்தில் எனது தாத்தாவின் மூலம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேன். அதன்பின் என் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்டு கர்த்தருடைய பணிக்கு என்னை அர்ப்பணித்து OMS என்ற ஸ்தாபனத்தில் சுவிசேஷகனாக இணைந்து தமிழகம் மற்றும் ஆந்திரா போன்ற பகுதிகளில் திருச்சபை நாட்டும் பணியில் நான்கு ஆண்டுகள் கர்த்தரின் பணியைச் செய்தேன்.

**கேள்வி: மிஷனெரியாகச் செல்ல அர்ப்பணித்தவுடன் நீங்கள் சந்தித்த சவால்கள் எவை?**

அருட்பணியாளரின் பதில்: மிஷனெரிப் பணிக்கு என்னை அர்ப்பணித்தப் பின் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. பெற்றோர் நான் மிஷனெரியாக செல்வதில் ஆர்வம் காட்டவில்லை. எனக்கு மூன்று சகோதரர்கள், ஒரு சகோதரி. இவர்களின் படிப்பு, எதிர்காலம் குறித்த கேள்வி எனக்குள்ளிருந்தது. போதகனாவதற்கு இறையியல் படிப்பைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டது. குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலை மிகுந்த மனக்கவலையைத் தந்தது. எனது தந்தை அடிக்கடி வியாதிப்பட்டு அவதியுற்ற சூழ்நிலையில், தேவனின் அழைப்பு என்னை அதிகமாய் நெருக்கி ஏவியது.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்திப் பணி செய்ய வேண்டும் என்ற தாகம் எப்படி ஏற்பட்டது?**

அருட்பணியாளரின் பதில்: சென்னையில் எனது போதகப் பயிற்சிக்காக மெட்ராஸ் பைபிள் செமினரி என்ற கல்லூரியில் நான் இறையியல் பயிற்சி மேற்கொண்டிருந்தபோது, ஒரு கன்வென்ஷன் கூடுகையில் அருட்திரு. கே. எஸ். ஆபிரகாம் ஐயா அவர்கள் தனது செய்தியின் போது பவுல் மெத்தப்படித்தவராய் இருந்தபோதும் கலாச்சாரம் கடந்த பிற இனத்தவருக்கு அல்லது புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கத் தன்னை (Apostle to the Gentiles) அர்ப்பணித்தார் என்றார். ஆகவே தமிழ்நாட்டில் பல்லாயிரக்கணக்கான திருச்சபைகளும், பல லட்சம் விசுவாசிகளும் இருக்கும்பொழுது, ஒரு கிறிஸ்தவ சபை கூட இல்லாத வடஇந்திய மாவட்டங்களுக்குத் தங்களை அர்ப்பணிக்க வாலிபர்கள் முன் வரவேண்டும் என்று ஆணித்தரமாக செய்தியில் எடுத்துக்கூறினார். அன்றே என்னை வட இந்திய கலாச்சாரம் கடந்த நற்செய்திப் பணிக்கு அர்ப்பணித்து, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் இணைந்தேன்.

**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

அருட்பணியாளரின் பதில்: ஹரியானா மாநிலத்தில் திருச்சபைகளை உருவாக்கும் ஊழியத்தில் அதிக நாட்கள் பணிசெய்தோம். வட இந்தியாவில் ஊழியம் செய்தபோது அங்குள்ளக் கால சூழ்நிலையில் மிக முக்கியமானது தீவிர குளிர் மற்றும் தீவிர வெயில். இந்த காலச்சூழ்நிலையில் ஊழியம் செய்ய முடியாமல் அதிக சரீர பலவீனங்கள் ஏற்பட்டது. இங்கு கிறிஸ்தவர்களுக்கு, அதுவும் திருமணமாகாத வாலிபர்களுக்கு மற்றும் மாமிசம் உண்பவர்களுக்கு வீடு கிடைப்பது மிகவும் அரிதான காரியம். சில கிராமங்களிலுள்ள தாழ்ந்த சமூகத்தினரை, அந்தஸ்து உள்ளவர்கள் கீழ்த்தரமாக நடத்துவதைக் காண நேர்ந்தது. இரு சாராருக்கும் மிகுந்த இடைவெளி இருந்ததால் இரு சாராரையும் ஒருசேர சந்திப்பதில் எதிர்ப்புகள் இருந்தன. நகரங்களில் சமய வெறியர்கள் நேரடியாக எங்களை எதிர்த்த நாட்களும் உண்டு.

**கேள்வி: ஊழியத்தின் பாதையில் தேவன் தந்த தரிசனம் என்ன?**

அருட்பணியாளரின் பதில்: பணித்தளத்தில் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ள மனமுடையவர்களைச் சந்தித்து கிறிஸ்துவுக்குள்ளாக நடத்துவதே. மிக முக்கியமாக எங்கெல்லாம் திறந்தவாசல் உண்டோ அவைகள் அடைக்கப்படும் முன் காலத்தை பிரயோஜனப்படுத்துவது நல்ல விளைவுகளைத் தரும். 45 - 50 ஆண்டுகளுக்கு முன் வட மேற்கு இந்தியாவிலிருந்த திறந்த வாசல் இன்று இல்லை. ஆகையால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளவேண்டும்.

**கேள்வி: பணித்தளத்தில் இன்னும் கர்த்தரை அறிந்துக்கொள்ளாத மக்களைக் குறித்து உங்களின் பாரம் என்ன?**

அருட்பணியாளரின் பதில்: எங்களின் இளமைக்காலத்தில் காடு, மேடு என்று பாராமல் பலமுறை சுவிசேஷம் அறிவித்தும் பல கிராமங்களில் மக்கள் இன்னும் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளாதது மிகுந்த மன வேதனையை அளிக்கிறது. குறிப்பாக ஹரியானாவில் உள்ள ஜாட் இன மக்கள் கர்த்தரை அறிந்து விடுதலை வாழ்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே என் இருதயத்தின் பாரமாகவுள்ளது.

**கேள்வி: கேரீத் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

அருட்பணியாளரின் பதில்: கர்த்தருக்குள் பிரியமான கேரீத் வாசகர்களே! வேறொரு வேலையாய் தன் வழி செல்லும் ஒருவன், வழியில் ஒரு வீடு பற்றி எரியக்கண்டால், அவசரமாக அந்த நெருப்பை அணைக்க முற்படுவதைப்போல், அழிந்து கொண்டிருக்கும் மக்களை மீட்க, யாராவது நம்மை அழைப்பார்கள் என்று எண்ணி தாமதிக்காமல், அழிவினின்று காப்பாற்ற கர்த்தர் உங்களை அழைக்கிறார்.

**ஜெபக்குறிப்புகள்:**

- சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் சுவிசேஷம் சென்றடைய...
- சுவிசேஷத்தைக் கேட்டும் பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்பாத ஜனங்களின் மனக்கண்கள் திறக்கப்பட...
- இயேசுவை ஏற்றுக்கொண்டவர்கள் சாட்சியாக வாழ, தான் அறிந்துக்கொண்ட இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிக்க ஜெபிப்போம்.

Mrs. Jeba Saral

# Delulu-Duo

அன்பு தம்பி, தங்கச்சி! Delulu – Duo பற்றிக் கேள்விப்பட்டிருக்கீங்களா? இந்த மாதம் நாம் அதற்காகத் தான் ஜெபிக்கப் போகிறோம். நம்மில் பலரும் இந்த அடிமைத்தனத்தில் சிக்கி இருக்கிறோம் என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா? ஆனா அதுதான் உண்மை!!

என்னதான் நாம் கஷ்டத்தில் இருந்தாலும், வெளியில், பல நேரங்களில், அதை காட்டிக் கொள்ளாமல் எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும் நபராகவோ அல்லது ஒரு "Cool Person"னாகவோ இந்த உலகத்துக்கு நம்மைக் காண்பிக்க, பல நேரங்களில் எத்தனிக்கிறோம். இதைத் தழுவி தான் இந்த Delulu Duo உருவாகிறது. வீட்டுக்குள்ளே ஒரு வாழ்க்கை, வெளியே சமூக வலைதளத்தில், ஒரு வாழ்க்கையாக இக்கால இளம் தம்பதியினர் தங்கள் Relationships, திருமண வாழ்க்கையை நடத்துவது தான் Delulu-duo என்கிறோம். வீட்டுக்குள்ளே சண்டைகளும், கருத்து வேறுபாடுகளும், அன்பில்லாமையும் காணப்படும் சூழலில், சமூக வலைத்தளத்தில் மட்டும், உலகிலேயே சிறந்த திருமண உறவை கொண்டதுபோல சித்தரிக்கின்றனர்!! பிரபல இளம் நடிகை நடிகர்களும், youtube பர்ஸ்ம் இதற்கு பெயர் போனவர்கள். இவர்களை ஆரம்பத்திலிருந்து பின்பற்றி வரும் இவர்களது followers, இப்பொழுது முற்றும் குழம்பிய நிலையில் காணப்படுகின்றனர். அதாவது, உண்மை அன்பிற்கும், மாயையான அன்பிற்கும்; உண்மை குடும்பத்திற்கும், போலியான ஒரு குடும்பத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறிய முடியாதவர்களாய்க் காணப்படுகின்றனர். இன்னும் பலர் பற்பல விதமான செயற்கையான பிம்பங்களைத் தங்கள் இருதயத்தில் கொண்டவர்களாய், திருமண வாழ்வுக்குள் நுழைந்து ஏமாற்றம் கண்டவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் பலர், இது ஒரு போலியான வலை என்று தெரிந்தும், அதைத் துணிச்சலோடு பணத்திற்காக நாடகமாடி, பலரை ஏமாற்றிக்கொண்டிருக்கின்றனர். இவ்விதமாய் சிக்கித்தவிக்கும் வாலிபர்கள் (Youth) மற்றும் இளம் வாலிபர்களுக்காக (Teens) ஜெபிப்பது நம் கடமையாக இருக்கிறது. இவர்களுக்காக உன் இருதயத்தில் நீ பாரம் கொண்டு ஜெபிப்பாயா?? உனக்கு உதவுவதற்காக, ஜெபக்குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது! சேர்ந்து ஜெபிக்கலாமா?

**ஜெபக்குறிப்புகள்::**

- Delulu – duoவைக் கண்டு, திருமண வாழ்க்கை இவ்வாறு தான் இருக்கும் என மனக்கோட்டை கட்டியிருக்கும் வாலிபர்கள் உண்மை நிலையை உணர, தேவன் அவர்களுக்கு தெளிந்த புத்தியைக் கொடுக்க ஜெபிப்போம்.
- இந்தப் Pair, ரொம்ப "Best Pair" என்று சொல்லி, கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களைக் காதல் வயப்பட வைக்கும் ஒரு கூட்டத்தாரால், பல மாணவர்கள் தங்கள் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் போகிறது. மேலும், அனைவரது கவனமும் அவர்கள் மீது இருப்பதால் பலவிதமான மன அழுத்தங்களுக்கு ஆளாகின்றனர்; இவர்களுக்காக ஜெபிப்போம்.
- இவ்வாறு சந்தர்ப்ப சூழ்நிலைகளால் ஏற்பட்ட உறவுகள், பின்னர் காதலாக மாறி, திருமணங்களில் முடிகிறது. ஆனால் அவர்களது திருமண வாழ்வு பல நேரங்களில், அவர்கள் நினைத்தாற்போல் இல்லாததால், பல தம்பதிகள் பிரிந்து வாழ்கின்றனர். பலர் விரக்தியினால் தற்கொலை செய்கின்றனர். இதுபோன்ற சூழல்கள், நம் தேசத்திலிருந்து முற்றிலும் மறைய ஜெபிப்போம்.
- இந்த Delulu-Duo அடிமைத்தனத்தில் பல பிரபல நடிகர் நடிகைகள், youtubersவும் இருப்பதால், இவர்களை பின்பற்றும் பல கோடி வாலிபர்களும் இந்த அடிமைத்தனத்தில் விழ 100% வாய்ப்புள்ளதால், இவ்வகை சினிமா மோகத்திலிருக்கும் வாலிபர்களுக்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- இந்த Delulu Duos பணம் சம்பாதிக்கும் நோக்கத்தில், பல பிரபலமான, விலை உயர்ந்த, ஆடம்பரமான இடங்களுக்கு டேட்டிங் சென்று, Post போடுவதால், பல குடும்பங்களில் சண்டைகள் உருவாகி சமாதானமின்மை ஏற்படுகிறது. இதுபோன்று சமாதானத்தை இழந்து நிற்கும் குடும்பங்களின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்.
- இளம் சமுதாயத்தினர் இந்த தாக்கத்தில் தங்கள் உண்மை குடும்பத்தின் வழக்கங்களையும், அன்பினையும் மறந்து, இந்த Delulu Duoவின் ஒவ்வொரு அசைவுகளையும் மற்றும் சிறு சிறு வெற்றிகளையும் கொண்டாடுவதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இவர்களது இரட்சிப்புக்காக நாம் ஜெபிப்போம்.
- கடந்த ஜூன் மாதத்தில், மகாராஷ்டிராவை சேர்ந்த Siya மற்றும் Ketan Agarwal, Delulu-Duoஆக இருந்த இவர்களுடைய உறவு, கடைசியில் ஒரு கொடூரமான கொலையாக முடிந்தது. இது போன்ற துணிச்சலான கொலைகள், விபரீதங்கள் நம் தேசத்தில் நிறுத்தப்பட ஜெபிப்போம்.
- பெற்றோர்கள் தங்கள் வாலிபப் பிள்ளைகள், யாரைக் குறித்து அதிகமாகப் பேசுகின்றார்கள், யாரால் கவரப்படுகின்றார்கள் என்பதைக் கவனமாய்க் கண்காணித்து, அவர்களை நல்வழிப்படுத்த ஜெபிப்போம்.
- விசுவாச குடும்பத்திலிருக்கும் வாலிபர்கள் இவ்வகை வாழ்க்கை வாழாமல் இருக்கவும், இவ்வாறு வாழ்கிறவர்களால் கவரப்படாமல் சாட்சியாக இருக்கவும் பாரத்தோடு ஜெபிப்போம்.
- காலங்கள் மாறினாலும், வேதத்தில் நாம் காணும் வெற்றியுள்ள தம்பதியர்களை முன்மாதிரிகளாய்க் கொண்டு, தேவனையே தங்கள் இல்வாழ்க்கையின் தலைவராய் வைத்து வாலிபர்கள் வாழ ஜெபிப்போம்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

# ஹரியான்வி மொழி



கிறிஸ்துவுக்குள் அன்பான செல்ல தம்பி தங்கைகளே, இந்த மாதம் ஹரியானா மக்கள் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

## ஹரியானா மக்களின் தோற்றம்:

ஹரியானா – பாலும், தயிரும் பொங்கும் நிலம். இந்திய மாநிலங்கள் மொழிவாரியாக மறுசீரமைக்கப்பட்டபோது, 1966 நவம்பர் 1 அன்று ஹரியானா மாநிலம் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்பு இன்றைய பஞ்சாப், ஹிமாச்சலப் பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகியவை PEPSU (Punjab and East Punjab States Union) என அழைக்கப்பட்ட பகுதியின் ஒரு பகுதியாக இருந்தன. இந்தியப் பிரிவினையின் போது முஸ்லீம் பெரும்பான்மை கொண்ட மேற்கு பஞ்சாப் பாகிஸ்தானுக்கு சென்றது.

ஹரியானாவின் பெரும்பாலான நிலப்பரப்பு சமதளமாகவும், மணற்பாங்காகவும் உள்ளது. மாநிலத்தின் வழியாக பெரிய ஆறுகள் பாயவில்லை என்றாலும், சட்லெஜ், யமுனை, பியாஸ் போன்ற ஆறுகளிலிருந்து கிளை கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளதால் ஆண்டு முழுவதும் பாசனத்திற்கு தண்ணீர் கிடைக்கிறது. இவ்வாறுகள் இமயமலையில் உள்ள பனிப்பாறைகளிலிருந்து தோன்றுவதால், மழையில்லாத கோடைக்காலத்திலும் பனி உருகுவதன் மூலம் தொடர்ந்து நீர் கிடைக்கிறது. ஹரியானா சமூகம் பெரும்பாலும் சாதி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்தியப் பிரிவினையின் போது ஹரியானாவில் வாழ்ந்த முஸ்லீம்கள் பெருமளவில் பாகிஸ்தானுக்கு இடம்பெயர்ந்தனர். அதே சமயம் பாகிஸ்தானிலிருந்து பல இந்து பஞ்சாபியர்கள் ஹரியானாவுக்குக் குடிபெயர்ந்தனர்.

மாநிலத்தின் அதிகாரப்பூர்வ மொழி இந்தி. மக்களின் தாய்மொழி அவர்களின் இனப் பின்னணியைப் பொறுத்து ஹரியான்வி அல்லது பஞ்சாபி ஆகும். ஹரியானாவின் ஆதிக்க சாதி ஜாட் (Jat) சமூகமாகும். இவர்கள் பெரும்பாலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 2.5 கோடி மக்கள்தொகையில் கிறிஸ்தவர்கள் 0.1% மட்டுமே உள்ளனர். இவர்களில் எழுத்தறிவு விகிதம் 7 வயதிற்கு மேற்பட்டோரில் 75.55% உள்ளது. இந்த சமூகத்தில் பல்வேறு குருக்கள் மற்றும் ஆன்மீக இயக்கங்கள் செல்வாக்கு பெற்றுள்ளன. மக்கள், குருவே தங்களை “பரமாத்மா” (உயர்ந்த இறை உணர்வு) நோக்கி வழிநடத்துவார் என்று நம்புகின்றனர்.

## FMPB ஊழியம்:

இங்கு FMPB ஊழியம் 1980களின் தொடக்கத்தில் சகோதரர் ஜாய் குட்டி மற்றும் சிலரால் ஹரியானாவின் சிர்சா மற்றும் பத்தேபாத் பகுதிகளில் தொடங்கப்பட்டது. முதல் பத்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க பலன் கிடைக்கவில்லை. அதன் பின்னர் மஜ்பி சீக்கியர் மற்றும் ராய் சீக்கியர் சமூகத்தினர் நற்செய்திக்கு நல்ல பதிலளிக்கத் தொடங்கினர். இதனால் பத்தேபாத் சுற்றுவட்டாரங்களில் பல புதிய ஊழிய மையங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் இந்த ஊழியம் பஞ்சாபின் புத்லாடா, சுனாம் மற்றும் அருகிலுள்ள பகுதிகளுக்கும் விரிவடைந்தது. காலப்போக்கில் ராய் சீக்கியர்களிடையே சுவிசேஷத்தைக் கேட்பதில் ஆர்வம் குறைந்தாலும், ஓட் ராஜ்புத் சமூகத்தினரிடையே சுவிசேஷத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்தது.

இந்த சமூகத்தைச் சேர்ந்த விசுவாசிகளின் உறவினர்கள் உத்தரகாண்ட் மாநிலத்தின் தொலைதூர மாவட்டங்களில் குடியேறியிருந்தனர். அவர்களும் நற்செய்தியை ஏற்றுக்கொண்டதால் அங்கும் புதிய ஊழிய மையங்கள் தொடங்கப்பட்டன.

## வேதாகம மொழிபெயர்ப்புப் பணி:

ஹரியான்வி மொழி பேசும் மக்களை நற்செய்தியின் மூலம் சென்றடைவதற்காக ஹரியான்வி மொழியில் வேதாகம மொழிபெயர்ப்பு அருட்திரு. சுதர்சன் தாமஸ் அண்ணன், திருமதி. லிடியா சுதர்சன் அவர்களால் தொடங்கப்பட்டது. இதுவரை ஊழியத்தில் பதிலளித்த மஜ்பி சீக்கியர், ராய் சீக்கியர் மற்றும் ஓட் ராஜ்புத் சமூகத்தினர் பெரும்பாலும் பஞ்சாபி அல்லது ஓட் ராஜ்புத் மொழியையே தாய்மொழியாகக் கொண்டிருந்தனர். ஹரியான்வியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களிடமிருந்து மிகக் குறைந்த அளவிலேயே பதில் கிடைத்ததால், இந்த மொழிபெயர்ப்பு ஒரு சுவிசேஷப் பணிக் கருவியாக மேற்கொள்ளப்பட்டது.

புதிய ஏற்பாட்டின் மொழிபெயர்ப்பு 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதோடு இவர்கள் மற்ற மொழிப்பெயர்ப்புகளை சரிபார்க்கும் பணியையும் செய்து வருகிறார்கள்.

## துதிக்குறிப்புகள்:

- ✦ கடினமாக உழைக்கும், விருந்தோம்பலில் சிறந்த இந்த ஹரியானா மக்களுக்காக...
- ✦ குழந்தை மரண விகிதம், ஆயுட்காலம், கல்வி போன்ற சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்களுக்காக...
- ✦ ஓட் ராஜ்புத் மற்றும் மஜ்பி சீக்கியர் போன்ற சில சமூகங்கள் நற்செய்திக்கு நல்ல பதிலளித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

## ஜெபக்குறிப்புகள்:

- ✦ சமூக மரபுகளுக்கு எதிராக காதலித்து திருமணம் செய்ய முயலும் பெண்கள் எதிர்கொள்ளும் “கௌரவக் கொலை” (Honour Killing) சம்பவங்கள் நிறுத்தப்படும்படி...
- ✦ ஜாட் சமூகத்தினர் நற்செய்தியை ஏற்றுக்கொள்ளும்படி...
- ✦ கிறிஸ்தவ விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையின் சாட்சி மூலம் பலருக்கு கிறிஸ்துவை அறிமுகப்படுத்தும்படி...
- ✦ Rev. சுதர்சன் தாமஸ் அண்ணன் சுகத்திற்காக ஜெபிப்போம்.

Mrs. Jane

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...




## 6 WEEKS OR DEATH

சோனம் வாங்சுக் (Climate Activist), டெல்லியில் நிரந்தர உண்ணாவிரதத்தில் இருந்தார். NEET தேர்வு தொடர்பான தகவல்கள் கசிந்தது மற்றும் கல்வி துறையில் நடக்கும் ஊழல்கள் குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் போராடினார்.

- சோனம் வாங்சு மற்றும் அவரோடு இணைந்து போராடும் வாலிபர்களின் முயற்சிகளுக்கு சரியான முடிவுக் கிடைத்ததற்காக துதிப்போம்.
- அரசு அதிகாரிகள் நீதி மற்றும் நேர்மையுடன் நடவடிக்கை எடுக்க ஜெபிப்போம்.

## DEADLY BETRAYAL

புனேயிலுள்ள ஒரு பாறையிலிருந்து சியா அவளது காதலனைத் தள்ளி கொலை செய்ததாகக் கூறப்படுகிறது. அவள் தங்களது காதல் உறவைக் காப்பாற்றுவதற்காக, அது விபத்து என்று பொய் கூறினாள்.

- Ketan (Victim) குடும்பத்தினருக்கு ஆறுதல் கிடைக்கவும், இளைய தலைமுறையினர் சாத்தானின் தந்திரங்களால் தவறான உறவுகளில் சிக்கிக் கொள்ளாமலிருக்கவும் ஜெபிப்போம்.





## SCORCHING EUROPE

ஐரோப்பாவில் (Europe) சமீபத்தில் வீசிய வரலாறு காணாத கடுமையான வெப்ப அலைகளால் அநேகர் உயிரிழந்துள்ளனர். பருவநிலை மாற்றத்தின் விளைவாக, உலகத்தின் மற்ற பகுதிகளை விட ஐரோப்பா இருமடங்கு வேகமாக வெப்பமடைந்து வருகிறது.

- ஐரோப்பாவில் நிலவும் கடும் வெயிலிலிருந்து மக்கள் பாதுகாக்கப்படவும், தட்பவெப்ப நிலை சீராகவும் ஜெபிப்போம்.
- முதியவர்கள், குழந்தைகள், மற்றும் நீண்டகால நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைத் தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.

## TN VS KA

பெங்களூரின் பாரிய கழிவுநீர் வெளியேற்றத்தை தடுக்க அதிகாரிகள் தவறிவிட்டனர். இதனால் தமிழக நதிகள் விஷமாகி, ஆதரவற்ற குடிமக்கள் கடுமையான சுகாதார நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

- அலட்சியமாயிருக்கும் அதிகாரிகள் தங்களது பொறுப்பை உணர்ந்து செயல்படவும், எல்லை தாண்டிய கழிவு மேலாண்மை அமைப்புகளை உடனடியாக அதிகாரிகள் செயல்படுத்தவும் ஜெபிப்போம்.






## CUSTODY AND RINGS

நியூயார்க் நகரின் எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தின் உச்சியில், ரஷ்யாவைச் சேர்ந்த இருவர் கடுமையான பாதுகாப்புப் பகுதியை மீறி, பொதுமக்களுக்கு அனுமதிக்கப்பட்ட உயரத்தைத் தாண்டி, 1,454 அடி உயரமான உச்சிக்கு ஏறிச்சென்று ஆபத்தான முறையில் சென்று காதல் திருமணம் செய்தனர்.

- இளைஞர்கள் தங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக ஆபத்தையும் தாண்டி பொறுப்பற்ற செயல்களில் ஈடுபடாமலிருக்க ஜெபிப்போம்.

## GTA 6

GTA 6 என்பதன் முழு வடிவம் ‘Grand Theft Auto VI” என்பதாகும். இது ராக்ஸ்டார் கேம்ஸ் (Rockstar Games) நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட மிகவும் பிரபலமான அதிரடி-சாகச வீடியோ கேம் ஆகும். இந்த Video Game இளைஞர்களின் அப்பாவித்தனத்தை பயன்படுத்தி அவர்களை சட்டவிரோதச் செயல்களைச் செய்யத் தூண்டுவதாக உள்ளது.

- இந்த ஆபத்தான வீடியோ கேம்களிலிருந்து தேவன் இளைஞர்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், பெற்றோர்கள் இவர்களை ஆரோக்கியமான மற்றும் பயனுள்ள பழக்கவழக்கங்களில் வழிநடத்த தேவையான ஞானத்தை தேவன் இவர்களுக்கு கொடுக்கும்படியாகவும் ஜெபிப்போம்.



# அத்தேனேயில் பவுலின் வைராக்கியம்

MR. ISRAEL NATHANIEL EDWARD



இந்த ஆண்டு முழுவதும், சாதகமற்ற சூழ்நிலைகளிலும் நற்செய்திக்காக எவ்வாறு வைராக்கியத்துடன் செயல்பட வேண்டும் என்பதைப் பவுலின் வாழ்க்கையிலிருந்து கற்றுக்கொண்டு வருகிறோம். அப்போஸ்தலர் நடபடிகள் 17ஆம் அதிகாரத்தைப் படிக்கும்போது, அத்தேனேவில் பவுல் முற்றிலும் புதிய ஒரு சூழ்நிலையை எதிர்கொண்டு, அதற்கு அவர் எவ்வாறு பதிலளித்தார் என்பதைப் பார்க்கிறோம். மார்ஸ் மேடையில் பவுல் ஆற்றிய உரை, ஒரு கலாச்சாரத்தில் ஏற்கனவே காணப்படும் உண்மைகளுடன் நற்செய்தியை எவ்வாறு இணைத்துச் சொல்லலாம் என்பதற்கான சிறந்த மாதிரியை நமக்கு அளிக்கிறது. அதேவேளையில், அந்தக் கலாச்சாரத்தின் பொய்யான மத நம்பிக்கைகளை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதையும் அது கற்பிக்கிறது.

பவுல் பெரோயாவிலிருந்து துரத்தப்பட்டபோது, பெரோயா, தெசலோனிக்கே மற்றும் பிலிப்பி ஆகிய இடங்களில் புதிதாக விசுவாசத்திற்கு வந்தவர்களைக் கவனிப்பதற்காக லூக்கா, சீலா மற்றும் தீமோத்தேயுவை அங்கேயே விட்டுவிட்டு புறப்பட்டார் (அப். 17:14). தீமோத்தேயுவிடமிருந்து செய்தி வரும் வரை அத்தேனேவில் காத்திருந்தபோது, அந்த விசுவாசிகளின் நலனைக் குறித்து மிகுந்த மனவேதனையுடன், அவர்களிடம் நேரில் இருக்க வேண்டும் என்ற ஆழ்ந்த ஏக்கத்தோடும் இருந்தார் (1 தெச. 2:17-18). இந்தத் தனிமையின் நடுவில், அவர் சுற்றிலும் நோக்கிப் பார்த்தபோது, விக்கிரகங்கள் நிறைந்த ஒரு நகரத்தைக் கண்டார் (அப். 17:16). அந்தக் காட்சி அவரது இருதயத்தையும் ஆழமாகத் தொட்டதோடு, ஆவிக்குரிய உணர்வையும் தூண்டியது. தேவனுக்குச் சேர வேண்டிய மகிமை பொய்த் தெய்வங்களுக்கு செலுத்தப்படுவதை அவர் கண்டபோது, அவரது உள்ளம் கொதித்தெழுந்தது. விக்கிரகங்களை வணங்கி அழிவின் பாதையில் சென்றுகொண்டிருந்த மக்களின் நிலையும், தேவனுடைய மகிமை அவமதிக்கப்படுவதும், அவரை ஊழியத்தில் ஈடுபடத் தூண்டின. ஆகையால் அவர் நற்செய்தியை அறிவித்து, மக்களுடன் விவாதித்து விளக்கிக் கூறினார்.

பவுல் பல்வேறு தரப்பினருடன் சந்தித்துப் பேசினார். யூதர்களும், தேவபக்தியுள்ள கிரேக்கர்களும் யூத ஜெபஆலயத்தில் இருந்தனர். சந்தை வெளிகளில் மத ஆர்வமுள்ள மக்கள் இருந்தனர்; மேலும் எப்பிகூரியரும் (Epicurean), ஸ்தோயிக்கருமான (Stoic) தத்துவஞானிகளும் இருந்தனர். எப்பிகூரியர்கள் தெய்வங்கள் இருப்பதை ஏற்றுக்கொண்டாலும், தெய்வீக பராமரிப்பையும், மனித வரலாற்றில் தெய்வங்களின் தலையீட்டையும் மறுத்தனர். தெய்வங்களைப் பற்றிய பயத்தின் அடிப்படையில் உருவான மதங்கள் மனிதருக்குத் தீங்கு விளைவிப்பவை என்றும் அவர்கள் கருதினர். இதனால் சாதாரண கிரேக்கர்களும், ரோமர்களும் அவர்களை நாத்திகர்களாகவே எண்ணினர். ஸ்தோயிக்கர்கள் அனைத்திலும் தெய்வீகம் நிறைந்துள்ளது (Pantheism) என்ற கொள்கையைப் பின்பற்றினர். தனிப்பட்ட படைப்பாளராகிய தேவனை அவர்கள் நம்பவில்லை. இவ்வாறான சிக்கலான சிந்தனைப் பின்னணியுடைய மக்களிடம் பேசும் அசாதாரண பொறுப்பு பவுலுக்குக் கொடுக்கப்பட்டது (அப். 17:17, 18).

ஆனால், பவுல் அத்தேனேக்கு வருவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, நற்செய்தியின் விதையை ஏற்கும்படி அந்த மண்ணை ஆயத்தப்படுத்தும் பணியை தேவன் ஆரம்பித்திருந்தார். கி.மு. 596ஆம் ஆண்டில் அத்தேனேவில் கொடிய கொள்ளைநோய் பரவியது. அதை சமாளிக்க கிரேத்தா நாட்டைச் சேர்ந்த ஞானியான எபிமெனிதேஸ் (Epimenides) அழைக்கப்பட்டார். அவர், சில ஆடுகளை அவிழ்த்து விடவும், அவை எங்கு படுத்துக்கொள்கின்றனவோ அங்கே பலியிடவும் அத்தேனியர்களுக்கு அறிவுரை கூறினார். அவர்களுடைய ஜெபத்திற்கு எந்த தெய்வம் பதிலளித்தது என்பதை யாரும் அறியாததால், அந்தப் பலிபீடங்களைக் குறிப்பிட்ட தெய்வத்தின் பெயரால் அல்ல, "அறியப்படாத தேவனுக்கு" என்று அர்ப்பணிக்கும்படி அவர் கூறினார். இதுவே, அவர்களுடைய மதத்தைத் தாக்காமல், பல்வேறு தரப்பினரிடையே பாலம் அமைத்து நற்செய்தியை அறிவிக்க பவுலுக்கு ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

பவுல், அந்த "அறியப்படாத தேவன்" யார் என்பதை இவ்வாறு வெளிப்படுத்தினார்: அவர் உலகத்தையும், அதிலுள்ள உயிருள்ள அனைத்தையும், உயிரற்ற அனைத்தையும் படைத்த படைப்பாளர். அவர் தூரத்தில் இருப்பவர் அல்ல; வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய அவர், மனிதர்களின் அன்றாட வாழ்க்கையில் செயல்படுகிறார். மனிதர்களின் கற்பனையாலும் கைகளால் செய்யப்பட்ட விக்கிரகங்களாலும் கட்டுப்படுத்தப்படுபவர் அல்ல. அவர் அறிய முடியாத தேவனும் அல்ல. எல்லா ஜாதிகளையும் அவர் படைத்தார்; அவர்கள் வாழும் காலங்களையும் குடியிருப்புகளின் எல்லைகளையும் அவர் நிர்ணயித்தார். தமது படைப்பின் உச்சமாகிய மனிதகுலம் மனந்திரும்பி, தம்முடைய பிள்ளைகளாக வேண்டும் என்று அவர் கட்டளையிடுகிறார். மேலும், உயிர்த்தெழுந்த இரட்சகரும் தெய்வ-மனிதருமான இயேசுகிறிஸ்துவின் மூலம் ஒவ்வொருவரையும் நியாயந்தீர்க்கப்போகும் நீதிபதியும் அவரே (அப். 17:22-31).

### இதன் விளைவு என்ன?

பவுலின் இந்த வெளிப்பாடு அங்கு கூடியிருந்த பல கிரேக்கர்களுக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இறந்தோரின் உயிர்த்தெழுதலைப் பற்றி அவர் பேசக் கேட்டபோது, சிலர் அவரை ஏளனம் செய்தனர். மற்றவர்கள், "இதைக் குறித்து மீண்டும் ஒரு முறை உம்மிடமிருந்து கேட்போம்" என்றனர். சிலர் பவுலுடன் இணைந்து விசுவாசித்தனர். தாமரி என்ற ஒரு பெண்ணும் விசுவாசித்தாள் (அப். 17:32-34). கி.பி. 170ஆம் ஆண்டளவில் கொரிந்துவின் டயோனீசியு (Dionysius), அத்தேனேவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் அவர் பின்வருவனவற்றைக் குறிப்பிடுகிறார்:

- அத்தேனேவில் ஏற்கனவே ஒரு கிறிஸ்தவத் திருச்சபை இருந்தது.
- அந்தத் திருச்சபை துன்புறுத்தலை அனுபவித்திருந்தது.
- அது அத்தேனேவின் பேராயராகிய புப்லியுவின் (Publius) தலைமையில் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

மேலும், புப்லியு இரத்தசாட்சியாக மரித்த பிறகு, அத்தேனேவின் குவாத்ராத்து (Quadratus) அந்தச் சபையை வலுப்படுத்தி மறுகட்டமைத்தார் என்றும் அவர் குறிப்பிடுகிறார். எனவே, ஆரம்பத்தில் அத்தேனேவின் திருச்சபை சிறியதாக இருந்திருக்கலாம். ஆனால், வரலாற்றுச் சான்றுகள் அது நிலைத்திருந்து, ஓரிரு தலைமுறைகளுக்குள்ளாகவே உறுதியான கிறிஸ்தவச் சமூகமாக வளர்ந்ததை உறுதிப்படுத்துகின்றன.

### நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்

நமது தேவன் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியும் அறிவை அடையவும் விரும்புகிறார். அந்த நோக்கத்திற்காக அவர் எப்போதும் செயல்பட்டுக்கொண்டே இருக்கிறார். நாம் நமது கண்களைத் திறந்தால், அவரது செயல்பாட்டின் தடயங்களை எங்கும் காண முடியும். இரண்டாவதாக, நமக்கு தனிப்பட்ட சிரமங்களும், அசௌகரியங்களும் இருந்தாலும், பவுலைப் பயன்படுத்திய அதே தேவன், தமது திருச்சபையை நிறுவி வளர்க்கும் பணியில் நம்மையும் வல்லமையாகப் பயன்படுத்த முடியும்.

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

**3. நியாயப்பிரமாணிகன் கொடுத்த இடம்:** மற்ற கோத்திரத்தாரை விட பெரிய, சிறந்த நிலப்பகுதியாகும். அது கௌரவமான தலைமைத்துவ பங்கு என்ற அர்த்தத்தை விளக்கும் நியாயப்பிரமாணிகன் கொடுத்த பத்திரப்படுத்தப்பட்ட பங்காக இருந்தது.

**முடிவு:**

இஸ்ரவேலின் எல்லைகளைப் பாதுகாத்த போர்வீரர்களாய்ப் புகழ்பெற்ற காத் கோத்திரத்தாரின் சின்னமாக இராணுவக் கூடாரம் உள்ளது. இது தொடர்ச்சியான இடப்பெயர்ச்சிக்கும், போருக்குத் தயாராயிருக்கும் தன்மைக்கும், எதிரிகளை வீழ்த்தி எல்லைகளை விரிவாக்குதலுக்குமுள்ள அர்ப்பணிப்பையும் விளக்குகிறது. ஆசாரியரின் மார்ப்பதக்கத்தில் 6வது இடத்திலுள்ள வைரம், காத் கோத்திரத்தாரை அடையாளப்படுத்துகிறது. அது விலையேறப்பெற்றது, கூர்மையானது. வைரத்தை வைரத்தால் மட்டுமே தீட்ட முடியும்.

பிரியமானவர்களே! கிறிஸ்தவர்களாகிய நாம் செயலற்றவர்களாகவும், சுயநலமாகவும் இருக்க முடியாது. அது சகோதரர் நல்வாழ்விற்கு நமது அர்ப்பணிப்பை எதிர்பார்க்கிறது. அவர்கள் தங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்ளவும், நற்செய்தியை முன்னெடுத்துச் செல்லவும் அணித்திரட்டப்படுகிறார்கள். போர்ப்படை விரிவாக்கப்பட்ட நிலப்பகுதியை நிலைநாட்டுவதில் உறுதியைக் காட்டுவது போல், நாம் அனைவரும் கிறிஸ்துவின் போர்ப்படையாய் செயல்பட்டு, தேசமெங்கும் சுவிசேஷத்தை நிலைநாட்டும் நல்ல போர்ச்சேவகனாய் செயல்பட அழைப்புக் கொடுக்கிறது. நற்செய்தியைப் பகிர்வதில் உறுதியாயும், அநேகரை நீதிக்கு உட்படுத்தி அவர்களின் நல்வாழ்விற்கு அடித்தளமாகவும் மாறுவோம்.

**“இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்.” (2 இரா. 7:9)**

# “தேசமே”

**தேசமே, இந்திய தேசமே!**
**எங்கள் இதய பாசமே!**
**இயற்கை அழகினில் சிறந்தவளே**
**எல்லா வளத்திலும் நிறைந்தவளே**
**திரள்கோடி ஜனத்தின் தாய் நீயே**
**மக்களாட்சியின் மாதிரியே**
**பழங்குடி ஜனத்தின் உறைவிடமே**
**உயர்தர மக்களின் பிறப்பிடமே**
**மா தேவன் இயேசு ராஜனை**
**நீ அறியவில்லையே**
**தேசமே இந்திய தேசமே**
**உன் இரட்சகர் இயேசு ஒருவரே.**

# நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

## வாலிபர் ஐக்கியம்

இமய முதல் குமரி வரையுள்ள
இதயங்கள் விடுதலைக் காணவே
இயேசெனும் தீபம் ஏற்றுவோம்
இளைஞரே எழுந்து செல்வோம்
செல்லுவோம் சேனை வீரராய்
வெல்லுவோம் தேவ அருளால்
ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா!

ஆண்டுகளாய் ஜனங்களெல்லாம்
அறியாமை இருட்டினில் வாழ்கிறார்
இயேசுவின் விடுதலைக் கூறுவோம்
பாரெங்கும் புகுந்து செல்லுவோம்
சுடராய் வாழந்திடுவோம்
சபையை பெருக்கிடுவோம்
ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா!

என் பெயரை சொல்லி அழைத்த
உன்னத தேவன் நீரன்றோ
'உன்னோடே கூட வருவேன்' என்றீர்
ஆவியால் நிறைத்திடுவீர்
வரங்கள் உவந்தளிப்பீர்
கனியால் அலங்கரிப்பீர்
ஓசன்னா! ஓசன்னா! ஓசன்னா!



HANDLE WITH CARE

BUILD ON THE RIGHT FOUNDATION

# வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பது – ஒரு காலணியில் பாடம்

நீங்கள் ஒரு புதிய ஜோடி காலணியை வாங்கச் சென்றிருக்கிறீர்கள் என்று கற்பனை செய்யுங்கள். கடைக்குள் நடந்து செல்லும் போது, அங்கே ஒரு ஜோடி காலணி உங்கள் கவனத்தை ஈர்க்கிறது. அதன் வடிவமைப்பு மிகவும் கவர்ச்சிகரமாக உள்ளது. நிறமும் உங்களுக்கு மிகவும் பிடித்ததாக இருக்கிறது. நீங்கள் தேடிக்கொண்டிருந்த காலணி இதுதான் என்று தோன்றுகிறது. அதன் தோற்றத்தால் உற்சாகமடைந்த நீங்கள் அதிகம் யோசிக்காமல் அதை வாங்கிவிடுகிறீர்கள். அடுத்த நாள் நீண்ட பயணத்திற்கு அந்தக் காலணியை அணிகிறீர்கள். சில மணி நேரங்களுக்குள் உங்கள் கால்களில் வலி ஆரம்பிக்கிறது. கொப்புளங்கள் தோன்றுகின்றன. ஒவ்வொரு அடியும் சிரமமாக மாறுகிறது. கடையில் மிகவும் சிறப்பாக தோன்றிய அந்த காலணி, அன்றாட வாழ்க்கைக்கு பொருத்தமற்றது என்பதை நீங்கள் உணருகிறீர்கள்.

நம்மில் பெரும்பாலோர் வெறும் தோற்றத்தை வைத்து மட்டும் காலணியைத் தேர்ந்தெடுக்க மாட்டோம். அது சரியாகப் பொருந்துகிறதா, நடக்க வசதியாக உள்ளதா, நீடித்துப் பயன்படுமா, அதன் நோக்கத்திற்கு ஏற்றதா என்பதை ஆராய்வோம். எதிர்காலப் பயணத்தில் அது நமக்கு நல்ல ஆதரவாக இருக்குமா என்றும் சிந்திப்போம். ஆனால் வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில், பலர் முதலில் ஈர்ப்பையும், உணர்ச்சிகளையும் மட்டுமே கவனித்து, நீண்டகால உறவைத் தாங்கி நிறுத்தும் குணாதிசயங்களைப் புறக்கணிக்கிறார்கள்.

திருமணம் என்பது ஒரு குறுகிய நடைப்பயணம் அல்ல; அது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு பயணம். நீங்கள் திருமணம் செய்யும் நபர் மகிழ்ச்சியிலும், துக்கத்திலும், வெற்றியிலும், தோல்வியிலும், ஆரோக்கியத்திலும், நோயிலும் உங்களுடன் நடந்து செல்லப் போகிறார். எனவே, வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பதற்கு ஞானமும், ஜெபமும், கவனமான பகுத்தறிவும் அவசியம்.

வேதம் கூறுகிறது **"இரண்டுபேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்துபோவார்களோ?"** (ஆமோஸ் 3:3)

ஒரு ஜோடி காலணி அது அணிபவருக்கு சரியாகப் பொருந்த வேண்டும் போல, கணவனும் மனைவியும் பொதுவான மதிப்புகள், விசுவாசம் மற்றும் வாழ்க்கையின் நோக்கம் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். பொருந்துதல் என்பது ஒரே மாதிரியான தன்மைகளைக் கொண்டிருப்பது அல்ல; ஒரே இலக்கை நோக்கி ஒன்றாக நடப்பதுதான். காட்சிப்பெட்டியில் ஒரு காலணி அழகாக தோன்றலாம். ஆனால், அதன் உண்மையான தரம் வாரங்களும், மாதங்களும் பயன்படுத்திய பிறகு தெரியவரும். அதுபோலவே, ஒரு மனிதனின் குணநலன்களும் காலப்போக்கில் வெளிப்படுகின்றன.

நட்பு மற்றும் திருமண முன் உறவின் காலங்களில், அந்த நபர் குடும்ப உறுப்பினர்களை எவ்வாறு நடத்துகிறார். அழுத்தமான சூழ்நிலைகளில் எவ்வாறு செயல்படுகிறார். ஏமாற்றங்களை எவ்வாறு கையாளுகிறார். தேவனோடு எவ்வாறு உறவு வைத்திருக்கிறார் என்பவற்றைக் கவனிப்பது முக்கியம். இயேசு, மனிதர்கள் அவர்களுடைய கனிகளினால் அறியப்படுகிறார்கள் என்று போதித்தார். திருமணத்திற்கு வலுவான அடித்தளம் கவர்ச்சியல்ல; நல்ல குணநலன்கள்தான்.

காலணியை வாங்கும் ஒரு புத்திசாலியான நபர், ஒரு நல்ல தரமான காலணியை வாங்குவதற்கு முன் அதன் தையல் உறுதியானதா? அதன் அடிப்பகுதி நீடித்து பயன்படுமா? பல ஆண்டுகள் பயன்பாட்டைத் தாங்குமா? என்று அதை நன்றாகச் சோதித்துப் பார்ப்பார். இதற்கு வெறும் அழகான தோற்றம் மட்டும் போதாது. அதேபோல் திருமண உறுதிபாட்டிற்குள் நுழைவதற்கு முன், விசுவாசிகள் ஒரு ஆவிக்குரிய தரச் சோதனையை மேற்கொள்ள வேண்டும். யாரும் முழுமையானவர்கள் அல்ல என்றாலும், வேதாகமம் ஆவிக்குரிய முதிர்ச்சியையும், திருமணத்திற்கான தயார்நிலையையும் வெளிப்படுத்தும் தெளிவான குணாதிசயங்களை வழங்குகிறது.

அப்போஸ்தலனாகிய பவுல், கணவனுக்கும் மனைவிக்கும் பொருந்தும் ஒரு முக்கிய கொள்கையுடன் தொடங்குகிறார்: **"தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்" (எபேசியர் 5:21).** ஒரு ஆரோக்கியமான திருமணம் பரஸ்பர மரியாதை, தாழ்மை மற்றும் ஒருவருக்கொருவர் சேவை செய்யும் மனப்பான்மை ஆகியவற்றின் மேல் கட்டப்படுகிறது.

**ஆண்களுக்கு இந்த அளவுகோல் இன்னும் உயர்ந்தது. பவுல் எழுதுகிறார்:**

**"கணவர்களே, கிறிஸ்து சபையில் அன்புகூர்ந்து, அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்ததுபோல, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்" (எபேசியர் 5:25).**

**ஒரு உறவுக்கு 'ஆம்' என்று கூறுவதற்கு முன், ஒரு பெண் தன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகள்:**

- இந்த மனிதன் மற்றவர்களுக்காக தியாகம் செய்யத் தயாராக இருக்கிறாரா?
- அவர் பொறுப்புணர்வுடன் செயல்படுகிறாரா?
- பணிவான தலைமைத்துவத்தை வெளிப்படுத்துகிறாரா?
- கிறிஸ்துவுடனான அவரது உறவு, அவரது அன்றாட முடிவுகளில் தெளிவாக தெரிகிறதா?

பெண்களைப் பற்றி பேசும்போது, வேதாகமம் வெளிப்புற அழகைக் கடந்து உள்ளார்ந்த குணநலன்களை நோக்கச் சுட்டிக்காட்டுகிறது.

**பேதுரு எழுதுகிறார்: "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது" (1 பேதுரு 3:4).**

**ஒரு ஆண் தன்னிடம் கேட்க வேண்டிய கேள்விகள்:**

- அவள் தயவு, தாழ்மை, ஞானம் மற்றும் ஆவிக்குரிய முதிர்ச்சியை வெளிப்படுத்துகிறாளா?
- தேவனுடனான தனது உறவில் தொடர்ந்து வளர்ந்து கொண்டிருக்கிறாளா?

கொலோ. 3:12-14இல் பவுல் கூறும் வார்த்தைகள், ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரு சிறந்த சோதனைப் பட்டியலை வழங்குகின்றன.

அவர்கள் இரக்கமுள்ளவர்களா? தயவுள்ளவர்களா? தாழ்மையானவர்களா? சாந்தமானவர்களா? பொறுமையுள்ளவர்களா? அன்புள்ளவர்களா?

இந்த குணாதிசயங்கள் கல்வி, தோற்றம், சமூக அந்தஸ்து அல்லது பொருளாதாரப் பின்னணி போன்றவற்றைக் காட்டிலும் மிக முக்கியமானவை.

# திருமண விருந்து உவமை

REV. K. KINGSLEY JOHN



*தேவனுடைய ராஜ்யம் என்பது ஒரு இடம் மட்டுமல்ல; அது தேவனுடைய ஆட்சி, கிருபை, அழைப்பு மற்றும் நித்திய ஐக்கியத்தின் அனுபவமாகும். மத்தேயு 22:1-14இல் இயேசு கூறிய திருமண விருந்து உவமை, தேவனுடைய ராஜ்யத்தின் மகிமையையும், அதற்கான அழைப்பையும், அதில் பங்கேற்க வேண்டிய தகுதியையும் வெளிப்படுத்துகிறது. இந்த உவமை, தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, பரிசுத்த வாழ்க்கையுடன் ராஜ்யத்தில் வாழ வேண்டிய அவசியத்தை எடுத்துரைக்கிறது.*

### 1. ராஜ்ய களம் – கிருபையின் அழைப்பு:

**“அப்பொழுது அவன் வேறு ஊழியக்காரரை அழைத்து: நீங்கள் போய், இதோ, என் விருந்தை ஆயத்தம்பண்ணினேன், என் எருதுகளும் கொழுத்த ஜெந்துக்களும் அடிக்கப்பட்டது, எல்லாம் ஆயத்தமாயிருக்கிறது; கலியாணத்திற்கு வாருங்கள் என்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்லுங்களென்று அனுப்பினான்”** *(மத்தேயு 22:4).*

*ஒரு ராஜா தனது மகனின் திருமணத்திற்காக பெரிய விருந்தை ஆயத்தம் செய்தான். இது தேவன் தமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலம் மனிதகுலத்திற்கு அளிக்கும் இரட்சிப்பின் விருந்தைக் குறிக்கிறது. தேவன் அனைவரையும் தனது ராஜ்யத்தில் பங்குகொள்ள அன்போடு அழைக்கிறார்.*

### 2. ராஜ்ய களத்தில் அழைப்பை அலட்சியம் செய்யாதே:

*அழைக்கப்பட்டவர்கள் பல்வேறு காரணங்களால் அந்த அழைப்பை நிராகரித்தனர். சிலர் தங்கள் வயல்களுக்கும், சிலர் தங்கள் வியாபாரங்களுக்கும் சென்றனர். உலகக் காரியங்கள் தேவனுடைய அழைப்பை விட முக்கியமானதாக மாறும் போது, மனிதன் ராஜ்யத்தின் ஆசீர்வாதத்தை இழக்கிறான்.*

*இன்றும் பலர் வேலை, செல்வம், பதவி, இன்பம் போன்றவற்றிற்காக தேவனுடைய அழைப்பை புறக்கணிக்கின்றனர்.*

### 3. ராஜ்ய களம் அனைவருக்கும் திறந்துள்ளது:

**“ஆகையால், நீங்கள் வழிச்சந்திகளிலே போய், காணப்படுகிற யாவரையும் கலியாணத்திற்கு அழைத்துக் கொண்டு வாருங்கள் என்றான்”** *(மத்தேயு 22:9).*

*முதலில் அழைக்கப்பட்டவர்கள் வராதபோது, ராஜா தெருக்களில் காணப்பட்ட நல்லவர்களையும், தீயவர்களையும் அழைத்தான். இது சுவிசேஷம் எல்லா மக்களுக்கும் உரியது என்பதை எடுத்துக்காட்டுகிறது. தேவனுடைய ராஜ்யத்தில் இனம், மொழி, சமூக நிலை, பொருளாதார வேறுபாடு ஆகியவற்றிற்கு இடமில்லை.*

### 4. ராஜ்ய களத்தில் பரிசுத்த வாழ்வு அவசியம்:

**“சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்”** *(மத்தேயு 22:12).*

*விருந்துக்கு வந்த ஒருவன் திருமண ஆடை இல்லாமலிருந்தான். ராஜா அவனை வெளியே அனுப்பினான். இது தேவனுடைய ராஜ்யத்தில் நுழைவதற்கு அழைப்பு மட்டும் போதாது; கிறிஸ்துவின் நீதியால் ஆடையணிந்து பரிசுத்த வாழ்க்கை வாழ வேண்டும் என்பதைக் கற்பிக்கிறது. திருமண ஆடை என்பது மனந்திரும்புதல், விசுவாசம், பரிசுத்தம் மற்றும் நீதியான வாழ்க்கையைக் குறிக்கிறது.*

### 5. ராஜ்ய களத்தின் இறுதி எச்சரிக்கை:

*இந்த உவமை, தேவனுடைய கிருபையின் அழைப்பு அனைவருக்கும் இருந்தாலும், அதை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ற வாழ்க்கை வாழ்பவர்களே ராஜ்யத்தின் மகிமையை அனுபவிப்பவர்கள் என்பதை உணர்த்துகிறது.*

### நினைவு வசனம்:

**“அந்தப்படியே, அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்றார்” (மத்தேயு 22:14).**

### நடைமுறைப் பாடங்கள்:

- *தேவனுடைய அழைப்பை தாமதமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.*
- *உலக ஆசைகளைவிட தேவனுடைய ராஜ்யத்தை முதன்மைப்படுத்த வேண்டும்.*
- *கிருபையால் அழைக்கப்பட்ட நாம் பரிசுத்த வாழ்க்கையை வாழ வேண்டும்.*
- *சுவிசேஷத்தின் அழைப்பை அனைவருக்கும் எடுத்துச் செல்ல வேண்டும்.*
- *இராஜ்யத்தின் விருந்தில் பங்குகொள்ள தினமும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.*

*திருமண விருந்து உவமை, தேவனுடைய இராஜ்யம் ஒரு மகிழ்ச்சியான விருந்தாக இருந்தாலும், அதில் பங்கேற்பதற்கு அழைப்பை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவின் நீதியால் ஆடையணிந்த வாழ்க்கை அவசியம் என்பதை வலியுறுத்துகிறது. இராஜ்ய களத்தில் வெற்றி பெறுபவர்கள், தேவனுடைய அழைப்பை மதித்து பரிசுத்தத்தோடும், விசுவாசத்தோடும் இறுதிவரை நிலைத்திருப்பவர்களே ஆவர். எனவே, நாமும் தேவனுடைய இராஜ்ய அழைப்பை ஏற்று, அவருக்கேற்ற வாழ்க்கை வாழ்ந்து, நித்திய திருமண விருந்தில் பங்கேற்கத் தயாராக இருப்போமாக.*



# கனம் பொருந்திய பொர்க்கியு பெஸ்து!

காத்திருந்த தேசத்தின் புதுக் காவலனாய் வந்தவன்,
பூத்திருந்த புதுமைகளின் புன்னகைப் பூவாய் மலர்ந்தவன்!
அரசாட்சியில் அறம்வளர்க்க அடிஎடுத்து வந்தவன்,
நெறியாட்சி தந்து நேர்மை ததும்ப உயர்மலைச் சுடராய் நின்றவன்!
பெலிக்ஸின் பிழைகளைப் பெருநெருப்பாய் சுட்டவன்,
பெரும்பாதக இலஞ்சத்தின் பேராணிவேர்களை அடியோடு அறுத்தவன்!
செங்கோல் ஏந்திச் சீர்மை செய்ய வந்த உத்தம புருஷன்,
எங்கோல் உரோமின் எழுச்சிமிகு தேசத்தின் சத்தியகுல அதிரூபன்!

பிளாவியஸ் ஏடுகளில் பிழையின்றி வாழ்ந்தவன்,
பெருங்களவர் கொட்டம் ஒடுக்கிய காரிருள் தீயானவன்!
பொய்த் தீர்க்கதரிசிகளின் பொய்மையை முற்றும் எரித்தவன்,
மெய்வழிப் பாதையின் மேன்மைமிகு செயல்வீரன்!
சிசேரியா மண்ணில் சீராய் ஒளிர்ந்த சத்தியச் சுடரானவன்,
சீர்மிகு முத்திரையின் முழுமுதல் ஒழுங்கானவன்!
வரலாற்றின் பக்கங்களில் வாழா வரம் பெற்ற அதிரூப சுந்தரன்,
வாழையடி வாழையாய் அழியாப் புகழ்கொண்ட அதிகார நற்பதன்!

பேரதிகாரப் பதவியிலும் பேருண்மை வழுவாது நின்றவன்,
பெருமகான் பவுலுக்கு உதவிட நல்உள்ளம் கொண்டவன்!
பெஸ்துவின் வினாவும் பெருமைமிகு பவுலின் விடையும்,
ஒழுக்கத்தின் எல்லைக்குள் ஒப்பற்ற பக்குவமாய் ஒளிர்ந்தன!
குற்றமும் சாட்சியமும் குவிந்து பொய்மை திரித்தன,
அரசியல் சதுரங்கத்தின் ஆழிப்பேரலைகள் தடம்மாறிச் சுழன்றன!
அந்திம நெருப்பாய் நீங்கா நினைவுகள் பேரொளி கொண்டு மறைந்தன,
கொடும்பொய்கள் யாவும் பனித்துளியாய் காற்றோடு கரைந்து போயின!
கோமகன் எண்ணங்கள் அழியாப் பொக்கிஷமாய், சவக்கடலில்
தஞ்சம் கொண்டன!

ஆமென்! உண்மை வென்றது! சூழ்ச்சி மருண்டது!
செங்கோல் நீதியும் விசுவாசச் சாட்சியும் உயர்நிலை கொண்டது;
செந்நாட்டின் ஏடுகளில் நீதியின் காவியம் அழியாப் புகழ்
பெற்றது!



REV. ALBERT PRABHAKARAN

# இயேசுகிறிஸ்துவின் சீடரான
# மத்தேயு

ஒருநீக் களம் — REV. PRABAKARA SARATHY

புதிய ஏற்பாட்டின் முதல் நற்செய்தி நூலின் உண்மையான ஆசிரியர் மத்தேயு என்பதில் எந்த விவாதமும் இல்லை. லேவி என்றும் அழைக்கப்பட்ட மத்தேயு, இயேசுவின் பன்னிரண்டு அப்போஸ்தலர்களில் (சீடர்களில்) ஒருவர் ஆவார். அடிப்படையில், கப்பர்நகூமில் வரி வசூலிப்பதே இவருடைய தொழிலாக இருந்தது. இவர் ரோமர்களுக்காக உத்தியோகப்பூர்வ வரி வசூலிப்பாளராகப் பணியாற்றினார். இயல்பாகவே, இவருடைய தொழிலின் காரணமாக, யூத சமூகம் இவரை ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுவாக, யூத மக்கள் வரி வசூலிப்பவர்களை வெறுத்து ஒதுக்கினர்.

### மத்தேயுவின் அழைப்பு:

இயேசுகிறிஸ்து மத்தேயுவை பெயர் சொல்லி அழைத்து, "என்னைப் பின்பற்றி வா" என்று கூறினார். "என்னைப் பின்பற்று" என்ற இயேசுவின் குரல் மிகவும் வலிமையானதாகவும், அதிகாரமிக்கதாகவும் இருந்தது. மத்தேயுவின் மனதில் எந்த ஒரு மாற்று யோசனையும் வரவில்லை. அடுத்த கணமே, மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினான். அவருடைய அழைப்பை ஏற்றுக்கொள்வதில் எந்தவித தயக்கமும் அவருக்கு இல்லை. இந்த உடனடி கீழ்ப்படிதல், ஆண்டவரின் குரல் எவ்வளவு உண்மையானது மற்றும் வல்லமை வாய்ந்தது என்பதைக் காட்டுகிறது. இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர் குழுவில் மத்தேயு ஒரு படித்த, எழுத்தறிவுள்ள சீடராகக் கருதப்பட்டார்.

### மத்தேயுவின் வாழ்க்கையிலிருந்து சில பாடங்கள்:

அவர் கணக்குப்புத்தகங்களை முழு உண்மையோடு பராமரிக்க முடிந்தவராக இருந்தாலும், சமூகத்தில் பொதுமக்களுடனான உறவுகளைப் பேணுவதில் தவறியிருக்கலாம். இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றும் போது அவர் அமைதியைக் கடைப்பிடித்தார் என்று நம்பப்படுகிறது. இயேசுவின் சீடராக அவர் எதற்காகவும் வாதிடவில்லை. மத்தேயு தன் தொழிலின் காரணமாக யூத சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படாதபோதிலும், பல தீர்க்கதரிசனங்களையும், பழைய ஏற்பாட்டு வாக்கியங்களையும் மேற்கோள்காட்டி புதிய ஏற்பாட்டின் முதல் நற்செய்தி நூலை எழுதினார்.

மத்தேயு தனது நற்செய்தி நூலை இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு பட்டியலுடன் தொடங்கியுள்ளார். இதில் சரித்திரக் கால மனிதர்களும், பழைய ஏற்பாட்டு மறைநூல் ஆளுமைகளும் இடம்பெற்றுள்ளனர். இந்த வம்சாவளிப் பதிவுகளின் மூலம், இயேசுகிறிஸ்து தாவீதின் அரச வம்சாவளியைச் சேர்ந்தவர் என்பதை மத்தேயு நிரூபித்துள்ளார். இதன் மூலம், இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டு வாக்குத்தத்தங்களின் நிறைவு என்பதை அவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

### மத்தேயுவின் ஊழியம்:

மத்தேயு பெர்சியா, எத்தியோப்பியா மற்றும் இந்தியா ஆகிய பகுதிகளில் ஊழியங்களைச் செய்தார் என்பதற்கான பாரம்பரிய பதிவுகள் உள்ளன. இயேசுகிறிஸ்துவின் முக்கியமான மற்றும் மிகவும் புகழ்பெற்ற போதனையான "மலைப்பொழிவை" மத்தேயு பதிவு செய்துள்ளார் [மத்தேயு அதிகாரங்கள் 5-7].



உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் "மகா பிரதான கட்டளை" கூற்றுகளை மத்தேயு பதிவு செய்துள்ளார். மேலும், மத்தேயு இயேசுகிறிஸ்துவின் உவமைகளையும் தனது நற்செய்தி நூலில் விரிவாகப் பதிவு செய்துள்ளார். கடவுளின் ராஜ்யத்தைப் பற்றிய உண்மையை மக்கள் புரிந்துகொள்ளும் பொருட்டு, இயேசுகிறிஸ்து அவர்களின் அன்றாட வாழ்க்கை முறையிலிருந்து உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்கினார் என்பதையும், இயேசுகிறிஸ்துவின் மறுவருகை மற்றும் இறுதித் தீர்ப்புக்கான அடையாளங்கள் குறித்த முக்கியமான கூற்றையும் மத்தேயு பதிவு செய்துள்ளார்.

### மத்தேயுவின் தியாக மரணம் (இரத்தசாட்சி):

ஆரம்பகால கிறிஸ்தவ பாரம்பரியங்களின்படி, அப்போஸ்தலராகிய மத்தேயு தனது விசுவாசத்திற்காக தியாக மரணமடைந்தார்; இருப்பினும் அவர் கொல்லப்பட்ட துல்லியமான முறை பற்றிய பதிவுகள் வேறுபடுகின்றன. அவர் எத்தியோப்பியாவில் தலை துண்டிக்கப்பட்டோ அல்லது வாளால் குத்தப்பட்டோ இறந்தார் என்று கூறப்படுகிறது.

### FMPB எதிர்பார்ப்பது என்ன:

அவருடைய ஊழியத்திற்காக அவரைப் பின்பற்றிய சீடரான மத்தேயுவைப்போல செயல்பட, FMPB வேதாகம ஆசிரியர்களையும், மொழிபெயர்ப்பாளர்களையும் எதிர்பார்க்கிறது. FMPBஇன் ஊழியங்களில் உங்கள் பங்களிப்பு, வேதாகமத்தை நம்பும் மேலும் பல அறிஞர்களைப் பெற வழிவகுக்கும். வேதாகம மொழிபெயர்ப்பிற்கு நீங்கள் அர்ப்பணிப்புடன் இருந்தால், உங்கள் அர்ப்பணிப்பு இந்த நிறுவனத்தால் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளப்படும். இந்த நிறுவனத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏதேனும் ஒரு வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியத்தில் நீங்கள் ஈடுபடலாம்.

நீங்கள் ஒரு வேதாகம ஆசிரியராக எங்களோடு இணைய விரும்புகிறீர்களா? நீங்கள் ஒரு வேதாகம மொழிபெயர்ப்பாளராக எங்களோடு இணைய விரும்புகிறீர்களா? இதோ உங்களுக்காக ஒரு திறந்த வாசல் இருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் சீடராக வந்து எங்களோடு இணைந்து கொள்ளுங்கள்.


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தமிழ்நாடு & பாண்டிச்சேரி மாநில
உபவாச
ஜெப முகாம்
2026
தரிசனமிகு பாடல்கள்
துதி, மன்றாட்டு ஜெபநேரங்கள்
அனலூட்டும் செய்திகள்
பணித்தளப் பகிர்வுகள்
ஆகஸ்டு
7 வெள்ளி காலை 10 மணி முதல்
9 ஞாயிறு மதியம் 1 மணி வரை
இடம்: அன்றன்றுள்ள அப்பம் ஜெபமண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம் அருகில் , திருப்பத்தூர் மாவட்டம்
செய்தியாளர்கள் :
Rev. I.K. ஆபிரகாம், முன்னாள் பொதுச்செயலாளர், FMPB
Rev.M. ராஜ், NPN, சென்னை
Rev. விஜய் பி. ஐசக், பொதுச்செயலாளர், FMPB
பாரத தேசம் இயேசுவின் அன்பினைக் கண்டிட,
தேவனின் பாதத்தில் அமர்ந்து, உபவாசித்து ஜெபிப்போம் வாருங்கள்!


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
பாவூர்சத்திரம் பணி மாவட்டம் - தென்காசி Dist.
நடத்தும்
சிறப்பு வாலிபர் மற்றும்
இளம் வாலிபர் கூடுகை
“தேசமே”
யோவேல் 2:21
நாள் : 15.08.26 (சனிக்கிழமை)
(சுதந்திர தின விடுமுறை)
நேரம் : காலை 9.00 மணி முதல்
மாலை 6.00 மணி வரை
இடம் : C.S.I கிறிஸ்து உயிர்த்தெழுதலின் ஆலயம்,
தீப் மீனாட்சிபுரம்
தலைமை : Rev. P. ஆசீர்வாதம் ராஜேஷ், B.Sc., B.D.
சேகரத் தலைவர் தீப் மீனாட்சிபுரம்
செய்தியாளர்கள் : Rev. S. இம்மானுவேல் ரஞ்சித்சிங், FMPB, Chennai
Rev. S. ஆன்ட்ரூஸ் ஜவகர், FMPB, Teens Wing
Rev. J. டேனியல் அருள்மணி, FMPB, Youth Wing
மற்றும் FMPB, Youth & Teens Wing Volunteers
பணித்தள பகிர்வு : Bro. S. இம்மானுவேல் (ஹிமாச்சல் பிரதேசம்)
வயது வரம்பு
13 முதல் 30 வரை
பதிவுக் கட்டணம்
Rs. 20/-
WORSHIP
FELLOWSHIP
GOD'S WORD
NEW BEGINNINGS
CAMP FIRE
Youths & Teens Come on and Celebrate with Jesus
தேநீர் மற்றும் மதிய உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
தொடர்புக்கு: FMPB – 98947 26460, 94423 30543, 99442 22011,
90250 78004, 94861 61614, 94422 40300


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
ஈரோடு மாவட்டம்
நடத்தும்
இளம் தம்பதியர் கூடுகை
30.08.26 (ஞாயிறு)
மதியம் 12.00 மணி முதல்
மாலை 5.00 மணி வரை
C.S.I Hospital Chapel,
Erode
Rev. J. டேனியல் அருள்மணி,
FMPB – Youth Wing
Mr. Benjamin &
Mrs. Ahi Benjamin
FMPB -Chennai
Couples Pray together
Stronger in Faith, Closer in Love
ONLY for COUPLES with 0 to 12 years of marriage
தொடர்புக்கு : FMPB – 7639 656 577 / 99761 18747 / 9940175546


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
தண்டையார்பேட்டை நடத்தும்
சிறப்பு வாலிபர்
மற்றும்
இளம் வாலிபர் கூடுகை
“தேசமே”
(யோவேல் 2:21)
நாள் : 30.08.26 (ஞாயிறு)
நேரம் : மாலை 4.00 மணி முதல்
இரவு 8.00 மணி வரை
இடம் : C.S.I கிறிஸ்து ஆலயம்,
48, 1வது தெரு, நேதாஜி நகர்
தண்டையார்பேட்டை
செய்தியாளர்கள் : Rev. S. ஆன்ட்ரூஸ் ஜவகர், FMPB, Teens Wing
Mrs. ஜெபராணி ஜான்சன், FMPB, Bangalurre
Mrs. பெலிசிட்டா சுந்தர், FMPB, Chennai
மற்றும் FMPB, Youth & Teens Wing Volunteers
வயது வரம்பு : 13 முதல் 30 வரை
இரவு உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
WORSHIP
FELLOWSHIP
GOD'S WORD
NEW BEGINNINGS
தொடர்புக்கு: FMPB – 9884868060 / 9176510367 / 988491985